விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 27
ஒலி 054 வள்ளுவர் ஆண்டு 2057 தை 28 புதன்கிழமை (11.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
ADMISSIONS OPEN NOW
MAIN INTAKE 2026
BSc IT, BBA
(C-4974)
SLIIT NORTHERN UNI, 239 Arasadi Road, Kantharmadam Junction, Jaffna
077 147 1471
021 7534 807

17 வயதுச் சிறுவன்

# யாழ்.அல்லைப்பிட்டியில் பொலிஸாரால் சுட்டுக்கொலை

## சிறுவனுடன் ஹயஸ் வாகனத்தில் பயணித்த இருவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் ஹயஸ் வாகனம் செலுத்திச் சென்ற 17 வயதுச் சிறுவன் ஒருவன் பொலிஸாரால் சுட்டுப் படு கொலை செய்யப்பட்டுள்ளான்.

(02ஆம் பக்கம் பார்க்க)



### நெற்றியில் பட்ட தோட்டா மூளையை ஊடுருவியதால் மரணம் சம்பவித்தது

சட்ட வைத்திய அதிகாரி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

நெற்றியில் பட்ட துப்பாக்கிச் சன்னம் மூளையை ஊடுருவிச் சென்றமையால் மரணம் சம்பவித்ததாக உடற்கூற்று அறிக்கையில் தெரிவிக்கப்

15ஆம் பக்கம் பார்க்க

### அருவிவெட்டுக்கு ஆட்களை ஏற்றச் சென்ற சிறுவன் மீதே துப்பாக்கிச் சூடு

மரணித்த சிறுவனின் சித்தி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அருவி வெட்டுக்கு வேலையாட்களை ஏற்றச் சென்றபோதே தனது பெறாமகன் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளதாக, உயிரிழந்த சிறுவனின்

15ஆம் பக்கம் பார்க்க

### வானிலிருந்து வாள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியில் பொலிஸாரின் துப்பாக்

15ஆம் பக்கம் பார்க்க

### மனித உரிமைகள் ஆணைக்குழு அல்லைப்பிட்டியில் கள ஆய்வு



15ஆம் பக்கம் பார்க்க

### அல்லைப்பிட்டி துப்பாக்கிச் சூடு உயர்மட்ட விசாரணை முன்னெடுக்கப்படுகிறது



அமைச்சர் நளிந்த

(கொழும்பு)

யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டி பகுதியில் நேற்று அதிகாலை பொலிஸார்

15ஆம் பக்கம் பார்க்க

### மருதனார்மடம் சந்தைக்கு பொம்மைத் துப்பாக்கியுடன் வந்தவர் பொலிஸாரால் கைது

மனநலம் பாதிக்கப்பட்டவராம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மருதனார்மடம் சந்தைக்கு பொம்மைத் துப்பாக்கியுடன் வந்தவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார் முன்

15ஆம் பக்கம் பார்க்க




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச நிறுவனங்களின் தலைமை பதவிகளில் விரைவில் மாற்றம்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பல அரச நிறுவனங்களின் தலைவர்கள், பணிப்பாளர் சபைகள் மற்றும் நிறுவனத் தலைவர்களை விரைவில் மாற்றுவதற்கு ஆலோசித்து வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பின் போதே அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

· முன்மொழியப்பட்டுள்ள இந்த மாற்றங்கள் குறித்து அரசாங்கம் தற்போது விரிவான ஆலோசனைகளை முன்னெடுத்து வருகின்றது.

அரச நிறுவனங்களின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படவுள்ள இந்த மாற்றங்கள் மற்றும் புதிய நியமனங்கள் குறித்த விபரங்கள் மிக விரைவில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும் நிர்வாகக் கட்டமைப்பை மறுசீரமைக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை அமையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

# வவுனியாவில் வாகனத்தில் 22 கிலோ கஞ்சா கடத்தல்

## இருவர் பொலிஸாரால் கைது

வவுனியாவில் 22 கிலோ கேரளக் கஞ்சாவை வாகனத்தில் கடத்திய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் போதைத் தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பட்டானிச்சூர் பகுதியில் கடமையில் இருந்த பொலிஸ் குழுவினர் கப்ரக வாகனம் ஒன்றை வழிமறித்து அதில் சோதனையில் ஈடுபட்டனர்.

இதன்போது குறித்த வாகனத்தில் சூட்சுமமான முறையில் கஞ்சா கொண்டு செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த வாகனத்தில் இருந்த இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், அதில் இருந்த 22 கிலோ கஞ்சாவும் மீட்கப்பட்டது.

குறித்த கஞ்சா போதைப் பொருள் மன்னாரிலிருந்து திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையிலேயே பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. (ம-7,250)

# புத்தசாசனத்தை அழிக்கும் வகையில் அரசு செயற்படுகின்றது

## நாமல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

புத்தசாசனத்தையும் நாட்டின் கலாசாரத்தையும் அழித்து புலம்பெயர் அமைப்புக்களின் விருப்பத்துக்கு அமைய செயற்பட்டால் தேர்தலில் வெற்றிப்பெற முடியும் என்று அரசாங்கம் நினைப்பது முற்றிலும் தவறாகும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை (10) நடைபெற்ற இளைஞர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

புத்தசாசனத்தையும் நாட்டின் கலாசாரத்தையும் அழித்து புலம்பெயர் அமைப்புக்களின் விருப்பத்துக்கு அமைய செயற்பட்டால் தேர்தலில் வெற்றி பெற முடியும் என்று நினைப்பது முற்றிலும் தவறாகும்.

திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தில் கைது செய்யப்பட்ட பிக்குகள் இன்றும் சிறையில் உள்ளார்கள். ஆட்சிக்கு வந்தவுடன் எம்மை கைது செய்வதாக அரசாங்கம் குறிப்பிட்டது. ஆனால் தற்போது சாட்சிகள் அழிக்கப்பட்டுள்ளது.

ஆகவே விசாரணை நடவடிக்கைகள் தாமதமாகும் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிடுகிறார்.

அரசாங்கத்துக்கு சார்பாக செயற்பட்ட நபர் பொலிஸ்மா அதிபராகச் செயற்பட்டுள்ளார்.

இதற்கமைய பொலிஸ்மா அதிபர் ஊடாக அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்கிறது. இது முற்றிலும் தவறானதாகும் என்றார். (ம-7)

# தையிட்டி விகாரைக் காணி உரிமத்தை வழங்கத் தயார்

## நயினை விகாராதிபதி கூறியதாக அருள் ஜெயந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக கட்டப்பட்ட தையிட்டி திஸ்ஸ விகாரையின் அமைவிட காணியின் உரிமையாளர்கள் தமது காணியின் உரிமத்தை நயினாதீவு நாகதீப விகாரையின் பெயரில் உரிமை மாற்றம் செய்து கொடுத்தால் தையிட்டி விகாரைக் காணியை அந்தக் காணிகளின் உரிமையாளர்களது பெயருக்கு உரிமை மாற்றி வழங்க தான் தயாராக இருப்பதாக நயினாதீவு நாகதீப விகாராதிபதி தெரிவித்துள்ளதாக அகில இலங்கை மக்கள் எழுச்சி கட்சியின் செயலாளர் அருள் ஜெயந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்களின் கோரிக்கைக்கு அமைய கடந்த ஞாயிற்றுக்கிழமை நயினாதீவு நாகதீப விகாராதிபதியை தாம் நேரில் சென்று சந்தித்து இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடியிருந்தோம்.

இதன்போது தேரரிடம் எழுத்து மூலம் தையிட்டி விகாரைக்குரிய காணியை சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட காணிக்குப் பதிலாக அதேயளவான காணியை விகாரைக் காணியிலிருந்து காணி உரிமையாளர்களுக்கு உரிமம் மாற்றி எழுதித் தரவேண்டும் என்று காணி உரிமையாளர் சார்பாகக் கோரியிருந்தோம்.

அதற்கு தேரர், தரமுடியும் ஆனால் சட்ட விரோத விகாரை காணி உரிமையாளர்கள் தங்கள் காணியை நாகதீப விகாரை பெயரில் எழுதித் தரவேண்டும் என்றும் கோரினார்.

அதை எழுத்து மூலம் எழுதித் தரச்சொன்னார். அதற்கமைய கடிதம் எழுதிக் கொடுத்தோம் என்றும் அவர் தெரிவித்திருந்தார். (ம-7,104)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

# யாழ். அல்லை...

குறித்த சம்பவம் நேற்று (10) அதிகாலை 1.15 மணியளவில் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்லைப்பிட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கற்பகப் பிள்ளையார் கோவில், வட்டுக்கோட்டை வடக்கு, சித்தங் கேணியைச் சேர்ந்த அல்பினோ அருள் பயாஸ் என்ற 17 வயதுடைய சிறுவனே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் குறித்து பொலிஸார் தெரிவிக்கையில், வேலணை - அல்லைப்பிட்டிப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான ஹயஸ் ரக வாகனம் ஒன்று, நேற்று அதிகாலை 1.15 மணியளவில் பயணித்துள்ளது.

குறித்த வாகனத்தை அப்பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் வழிமறித்து சோதனை செய்ய முற்பட்டுள்ள நிலையில் பொலிஸாரின் உத்தரவை மீறி குறித்த வாகனம் அதிவேகமாகச் சென்றுள்ளது.

பொலிஸாரின் உத்தரவை மீறிச் சென்ற வாகனம் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் காயமடைந்த குறித்த சிறுவனைப் பொலிஸார் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதே நேரம் சம்பவத்தின் போது குறித்த வாகனத்தில் வட்டுக்கோட்டை மற்றும் நல்லூர்ப் பகுதிகளைச் சேர்ந்த மேலும் இருவர் பயணித்த நிலையில் அவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தினை ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் நளினி சுபாஸ்கரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதேவேளை குறித்த சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,33,104)

5ம் ஆண்டு நினைவலைகளுடன்...

மலர்வு 17 - 05 - 1958



உதிர்வு 07 - 02 - 2021

அமரர்
நித்தியானந்தம் லங்கநாதன்

திதி: தசமி (11.02.2026)

ஆண்டுகள் கடந்தோடுகின்ற போதும் – அப்பா
உங்கள் இழப்பிலிருந்து இன்றும் நாங்கள் மீளவில்லை.
அப்பா என்று அழைக்க ஏங்கும் – எம்
உதடுகளுக்கு இன்று ஆறுதல் சொல்ல யார்?
கனவுகளில் கூட உங்கள் சுவடுகள் தேடி
கண்களை மூடி உறங்கச் செல்கின்றோம்.
என்றும் உங்கள் நினைவுகளுடன் நாங்கள்...
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அம்பன், குடத்தனை. மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடின் தொழிற்சங்க நடவடிக்கையில் குதிப்போம்

## மின்சாரசபை ஊழியர்கள் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**இலங்கை மின்சார சபையை கலைப்பதற்கான திகதியை வர்த்தமானி மூலம் அறிவித்தால், எவ்வித முன்னறிவிப்புமின்றி கடுமையான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக மின்சார சபை தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.**

இது தொடர்பாக 24 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளின் கையொப்பத்துடன் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மின்சார சபை ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான 8 முக்கிய கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை கடந்த ஜனவரி 12 ஆம் திகதி தொழிற்சங்கங்கள் அமைச்சருக்கு சமர்ப்பித்திருந்தன.

இதுவரையில் அந்த கோரிக்கைகளுக்கு எவ்வித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை என தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

கோரிக்கைகள் குறித்து மீண்டும் நினைவுபடுத்தி நேற்று முன்தினம் மற்றுமொரு கடிதம் அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால், தொழிற்சங்க நடவடிக்கையைத் தவிர வேறு வழியில்லை என ஊழியர்கள் தீர்மானித்துள்ளனர்.

ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றாமல், மின்சார சபையை கலைப்பதற்கான திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டால், முன்னறிவிப்பு இன்றி மின்சார சபை பொறியியலாளர் சங்கம் உள்ளிட்ட 24 தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்துள்ளன. (நி)

# மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு இந்தியா அழுத்தம் கொடுக்கும்

## ரணில் தரப்பு நம்பிக்கை



(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை அநுர அரசு நடத்தும் என எதிர்பார்க்கின்றோம். அதற்கான அழுத்தத்தை ரில்வின் சில்வா உள்ளிட்டவர்களுக்கு இந்தியா கொடுக்கும் என நம்புகின்றோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அநுர அரச தரப்பினர் பின்வாங்கி வருகின்றமை தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், "மாகாண சபைத் தேர்தலை இந்த வருடம் நடத்துவதாகவே அரசாங்கம் தெரிவித்திருந்தது.

அத்துடன் வரவு - செலவு திட்டத்திலும் அதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதனால் மாகாண சபைத் தேர்தலை அரசு நடத்தும் என்ற நம்பிக்கையிலேயே நாங்கள் இருக்கின்றோம்.

எனினும், டித்வா புயல் அனர்த்தத்துடன் தற்போதைய நிலையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான அரசின் முயற்சி குறைந்துள்ளதாகவே தெரிகின்றது.

ஆனால் தற்போது மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா உள்ளிட்ட சிலர் இந்தியாவுக்குச் சென்றிருக்கின்றனர்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு இந்தியா ரில்வின் சில்வாவுக்கு ஓரளவு அழுத்தம் கொடுக்கும் என நினைக்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி)

# அலங்காரச் செடியுடன் இளைஞன் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பயணி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

6 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள அலங்காரச் செடிகளை சட்ட விரோதமாக நாட்டிற்குள் கொண்டு வந்த பயணியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்திற்குரிய விமானப் பயணி நேற்றுக் காலை சுங்க பல்லுயிர், கலாசார மற்றும் தேசிய பாரம்பரிய பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகள் மற்றும் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீர்கொழும்பு கொச்சிக் கடையைச் சேர்ந்த 19 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

பிரிலோடென்ட்ரம், அக்லோனெமா, அலோகாசியா மற்றும் மொன்ஸ்டேரா வகைகளைச் சேர்ந்த 386 அலங்காரச் செடிகள்; அவர் கொண்டு வந்த 3 சூட்கேஸ்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் இது குறித்து மேலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# புத்தர் சிலை விவகாரம்

## பிக்குகளை விடுவிக்குமாறு கோரிக்கை

(திருமலை)

திருகோணமலை போதிராஜாராமையில் புத்தர் சிலை பிரதிஷ்டை செய்யப்படுவது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினை குறித்து, கோட்டே ஸ்ரீ கல்யாணி சாமசிறி தர்ம மகா சங்க சபையின் மகாநாயக்க தேரர் கலாநிதி இத்தேபான தம்மாலங்கார ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பிக்குகள் உள்ளிட்ட 10 பேர் சிறையில் அடைக்கப்பட்டமை குறித்து தமது கவலையைத் தெரிவிப்பதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பண்டைய மன்னர்களால் உயிரைக் கொடுத்தும் பாதுகாக்கப்பட்ட மற்றும் சாசனத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்த புண்ணிய பூமியிலேயே பிக்குகள் புத்தர் சிலையை நிறுவிய தாகவும், அவர்கள் சிலையை வைக்கச் சென்றதற்காகவே தாக்குதலுக்கு உள்ளானார்களே தவிர வேறு எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை என்றும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சாதாரண சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு, சாத்தியமற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தி அரசாங்கத்தின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை, சாசனத்திற்கு எதிராகத் திட்டமிட்டு இழைக்கப்பட்ட ஒரு பெரும் குற்றம் எனத் தாம் நம்புவதாகவும் அக்கடிதத்தில் மகாநாயக்க தேரர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, குறித்த பிக்குகள் உள்ளிட்ட 10 பேரையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இக்கடிதத்தின் ஊடாக அவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (நி)

# புதிய அரசமைப்பு வெறும் கனவு

## அரசைச் சாடுகின்றார் விஜயதாஸ



(கொழும்பு)

தற்போதைய அரசின் காலத்தில் புதிய அரசமைப்பு உருவாகாது என்றும், அது வெறும் கனவு மட்டுமே என்றும் முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசு புதிய அரசமைப்பை உருவாக்கும் என்றும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு முன்வைக்கப்படும் என்றும் அக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசின் ஆட்சிக் காலத்தில் புதிய அரசமைப்பு உருவாகும் என்பது வெறும் கனவு மட்டுமேயாகும்.

தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்கள் கடந்தும், இன்னும் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளைக்கூட எடுக்காமல் இருக்கின்றது.


அரசு முதலில் புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டுமானால், அதற்கான ஆரம்பகட்ட பணிகளைத் தொடங்க வேண்டும். ஆனால், இதுவரை எந்தவொரு நடவடிக்கைகளையும் அரசு எடுக்கவில்லை என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்திய - பாகிஸ்தான் ரி-20 போட்டி திட்டமிட்டபடி நடைபெறும்!

## அறிவித்தது பாகிஸ்தான் அரசு; நன்றி தெரிவித்தார் ஜனாதிபதி அநுர



**ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்தியாவுக்கு எதிராக நடைபெறவுள்ள போட்டியை புறக்கணிப்பதாக அறிவித்திருந்த பாகிஸ்தான் அரசாங்கம் தற்போது அந்த முடிவை திரும்பப் பெற்றது.**



ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் எதிர்வரும் 15 ஆம் திகதி இந்தியாவுக்கு எதிரான போட்டியை புறக்கணிப்போம் என்று பாகிஸ்தான் அரசு அறிவித்திருந்தது. இது சர்வதேச கிரிக்கெட் அரங்கில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில் லாகூரில் ஞாயிற்றுக்கிழமை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் அதிகாரிகள் சந்தித்தனர்.

ஐ.சி.சி துணைத் தலைவர் இம்ரான் கவாஜா மற்றும் செயற்குழு உறுப்பினர் முபாஷிர் உஸ்மானி ஆகியோர் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் மொஹ்சின் நக்வியை சந்தித்தனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இராஜதந்திர பேச்சுவார்த்தை மூலம் உலகக்கிண்ண ரி-20 தொடரின் எதிர்பார்ப்பு மிக்க போட்டியான இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்ததன் படி குறித்த போட்டிக்கான டிக்கெட்டுக்களை பெற்றுக் கொள்ள ரசிகர்கள் இலங்கை கிரிக்கெட் வாரியத்தின் உத்தியோகபூர்வத் தளத்தை அணுக முடியும்.

இந்தியாவுடன் நடைபெறவுள்ள கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தீர்மானித்தமைக்காக, பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் இற்கு தனது நன்றியைத் தெரிவிப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதன்படி, ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டி திட்டமிட்டபடி நடைபெறவுள்ளமை மகிழ்ச்சியளிப்பதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தத் தொடரின் இணை நடத்துநர் என்ற வகையில், சர்வதேச கிரிக்கெட் பேரவைக்கும் இதற்கு ஆதரவளித்த அனைவருக்கும் இலங்கை தனது நன்றியைத் தெரிவித்துள்ளது. (3)

# உலகக்கிண்ண ரி-20 தொடர்

## நமீபியாவை வீழ்த்தியது நெதர்லாந்து



புதுடில்லியில் உள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் நேற்று நடைபெற்ற 2026 ஐ.சி.சி ஆடவர் ரி-20 உலகக் கிண்ணத்தின் 10 ஆவது போட்டியில், நெதர்லாந்து அணி நமீபியாவை ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நமீபியா அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 156 ஓட்டங்களை எடுத்தது.

நமீபியா சார்பில் ஜான் நிக்கோல் லோப்டி-ஈடன் 42 ஓட்டங்களையும், ஜான் ப்ரைலின்க் 30 ஓட்டங்களையும் அதிகபடியாக எடுத்தனர்.

பின்னர் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி, இரண்டு ஓவர்கள் மற்றும் 7 விக்கெட்டுகள் மீத மிருந்த நிலையில் இலக்கினை எட்டியது.

48 பந்துகளில் 72 ஓட்டங்கள் எடுத்த பாஸ் டி லீட், இன்னிங்ஸை நங்கூரமிட்டு நெதர்லாந்து அணியை ஒரு அபாரமான வெற்றிக்கு அழைத்துச் சென்றதுடன், போட்டியின் ஆட்டநாயகனாகவும் தெரிவானார். (3)



தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் 20 வயது ஆண்கள் பிரிவில் மன் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி 2 ஆம் இடத்தை பெற்ற நிலையில் குறித்த வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை இடம்பெற்றது. (படம்:- ஜோசப்நயன்)

# ரி-20 உலகக்கிண்ண தொடரிலிருந்து வனிந்து ஹசரங்க விலகல்

2026 ஐ.சி.சி ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரிலிருந்து வனிந்து ஹசரங்க விலகியுள்ளார்.

தொடைப் பகுதியில் ஏற்பட்ட உபாதைக் காரணமாக அவர் போட்டியிலிருந்து விலகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் வனிந்து ஹசரங்கவிற்கு பதிலாக துஷான் ஹேமந்த சேர்க்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kilinochchi District Secretariat

## INVITATION FOR BIDS (IFB) – 2026

## Sand Washing Work

The Chairman of Departmental Procurement Committee of Kilinochchi District Secretariat invites sealed bids from interested eligible and qualified bidder for Sand Washing Works for Construction Use from the below listed tanks in the Pradesa Sabha 5 areas.

1. Bidding will be conducted through **National Competitive Bidding.**
2. Interested eligible bidders may obtain further information and inspect the Procurement Documents at the address given below.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the CIDA registration and qualification requirements listed below.

| Procurement No. | Pradesa Sabha | Place / Tanks | Estimate (without VAT in Mn) | Contract Period (Days) | CIDA Grade & Specialty | Bid Validity Period | Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Amount (Rs.) | Validity Period |
| KN/F/PMU/2026/W/01 | Karachchi | 1. Irranaimadu<br>2. Kalmadu | 36.50 | 240 | C7 or Above | 25.05.2026 | 365,000 | 22.06.2026 |
| KN/F/PMU/2026/W/02 | Poonakary | 1. Kariyalainagapaduwan<br>2. Pandiveddi<br>3. Kudamurudy | 54.76 | 240 | C7 or Above | 25.05.2026 | 550,000 | 22.06.2026 |

4. A complete set of bidding documents could be purchased **from 11.02.2026 till 20.02.2026** between **09:00 Hrs to 15:30 Hrs** on working days, upon submission of,
   a. **Bank Slip Rs.7000/=** paid to the **Bank of Ceylon** Account No. **7041986** of **"District Secretary, Kilinochchi"** as non - refundable fee.
   b. **"Application for Bid Documents"** available in the website of District Secretariat, Kilinochchi. (http://kilinochchi.dist.gov.lk/index.php/en/downloads/application.html)
5. A Pre Bid Meeting will be held on 16.02.2026 at 10:00Hrs at Conference Hall, District Secretariat, Kilinochchi.
6. The duly completed Bids must be delivered to **"Chairman, Departmental Procurement Committee, Kilinochchi District Secretariat, Kilinochchi"** or deposited in the "Procurement Box" available in the Chief Accountant's Room, Finance Branch on or before **11:00 Hrs on 23rd of February 2026.** Bids will be opened immediately after the closing of bids. Bidders or their authorized representatives are allowed to be present at the time of opening of the Bids.
7. All rights are reserved to the Chairman of DPC to accept, reject or partially accept of any bids at any stage without paying any compensation to any party.

**Chairman,**
**Departmental Procurement Committee,**
**Kilinochchi District Secretariat,**
**Kilinochchi, T.P/ Fax:- 021 228 5352, Web http://kilinochchi.dist.gov.lk**

(C-4970)


## விசேட சுற்றிவளைப்பில் 802 பேர் கைது

(கொழும்பு)

நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும் 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய நடவடிக்கையின் மூலம் 802 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கையில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையின் போது 791 சுற்றிவளைப்புகள் நடத்தப்பட்டுள்ளதுடன், அவற்றில் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள் தொடர்பான 588 சுற்றிவளைப்புகளே அதிகூடிய எண்ணிக்கையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் களில் 11 பேர் புனர்வாழ்வுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## நாட்டை வந்தடைந்தது ஓமான் கப்பல்



(கொழும்பு)

ஓமானின் ரோயல் கடற்படைக்குச் சொந்தமான "சாத்" என்ற கப்பல் நேற்று செவ்வாய்க்கிழமை நாட்டை வந்த டைந்ததாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

நாட்டுக்கு வருகை தந்த கப்பலுக்கு பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

கப்பல் வருகை இரு நாட்டு கடற்படைகளுக்கும் இடையிலான தொழில்முறை தொடர்பு மற்றும் நல்லெண்ண பரிமாற்றங்களை எளிதாக்கும் என கடற்படை தெரிவித்துள்ளது.

கப்பல் நாட்டில் நங்கூரமிடப்பட்டிருக்கும் காலப் பகுதியில் பணியாளர்கள் கொழும்பு நகரில் உள்ள பல சுற்றுலா தலங்களை பார்வையிட திட்டமிடப்பட்டுள்ளது. (நி)

# இராசிபலன்

11.02.2026
தை 28, புதன்கிழமை
நவமி முற்பகல் 11.03 மணிவரை

அனுசம் முற்பகல் 11.55 மணிவரை
சுபநேரம் 5.04-6.34 மணிவரை
இராகுகாலம் 12.34-2.04 மணிவரை

சந்திராஷ்டமம்- அச்சுவினி, பரணி.

வளவன்

**மேஷம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மற்றவர்களுக்காக பொறுப்புச் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது, குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் தோன்றி மறையும்.

**ரிஷபம்** நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்,பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**மிதுனம்** சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், தொழிலில் உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், வியாபார விருத்தியுண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும்.

**சிம்மம்** தொல்லை கொடுத்தவர்கள் தோள் கொடுத்து உதவ முன் வரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.

**கன்னி** உயர்வான சிந்தனைகள் தோன்றும், வழிபாடு முன்னேற்றம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்** தொழில் வளர்ச்சி அதிகரிக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், வங்கிச் சேமிப்பு உயரும், தேவைகள் பூர்த்தியாகும், வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்** குடும்பத்தில் சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், உறவினர் பகை அகலும், ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள், கற்பனை மிகுதியான நாள்.

**தனுசு** தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், தேக நலனில் அக்கறை தேவை, மறக்க முடியாத சம்பவங்கள் இடம் பெறலாம், சுப விரயங்கள் கூடும்.

**மகரம்** பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், திடீர் பணவரவு மகிழ்ச்சி தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே கை கூடும், செய் தொழி--லில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகிவிடும், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம்.

எதையும் நம்பிக்கையுடன் தாங்குபவன் இறுதியில் வெல்வான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரமதானம்

(தருமபுரம்)

க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் பூநகரி கிராஞ்சி கடற்கரையில் சிரமதானப் பணிகள் அண்மையில் முன்னெடுக்கப்பட்டன.

க்ளீன் ஸ்ரீலங்கா செயற்பாட்டின் பூநகரி பிரதேச அமைப்பாளர் தலைமையில் நடைபெற்ற குறித்த சிரமதானப் பணியில் கடற்றொழில் அமைச்சரின் இணைப்பாளர், இராணுவத்தினர், கடற்படையினர், பொலிஸார் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள், பிரதேச மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (8-316)

## நெல் அறுவடை விழா



(தருமபுரம்)

"பரசூட்" முறையில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்ட நெல் அறுவடை விழா உருத்திரபுரம் பொறிக்கடவை அம்மன் ஆலயத்திற்கு அருகில் கு.விநாயகமூர்த்தி என்ற விவசாயியின் வயலில் நடைபெற்றது.

உருத்திரபுரம் விவசாயப் போதனாசிரியர் நா.மகாராஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர் பா.தேவரதன் கலந்து கொண்டார். (8-316)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உடுவில் மகளிர் கல்லூரியின் மேல் பிரிவு மாணவர்களுக்கான வருடாந்த இல்ல மெய் வல்லுநர் விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.

கல்லூரி மைதானத்தில் மதியம் 1.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இவ்விழாவிற்கு வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.குமாரசூரியர் செந்தில்குமரன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். (8)

## பெருந்தோட்ட பிரதி அமைச்சர் யாழில் விசேட சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், பனை மற்றும் பனை சார் கைத்தொழிலினை அபிவிருத்தி செய்வது தொடர்பாக பன்ன அபிவிருத்தி சபையின் பிரதான காரியாலயத்தில் பனை அபிவிருத்தி சபையின் தலைவர் மற்றும் அதிகாரிகளுடன் விசேட சந்திப்பொன்றினை மேற்கொண்டிருந்தார்.



இதன்போது 2025 ஆம் ஆண்டு பனை அபிவிருத்தி சபையின் வேலை திட்டங்கள் பற்றியும் அடைந்த அபிவிருத்தி தொடர்பாகவும் 2026 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் பற்றியும் விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டது. (8-33)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஓய்வுபெற்ற ஊழியர் சங்க பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்க பொது அறையில் யாழ். பல்கலைக்கழக ஓய்வுபெற்ற ஊழியர் சங்கத் தலைவர் கந்தசாமி நாகஜெயகுமாரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (8)

## வளர்ப்பு மாடுகள் திருட்டு

(வேலணை)

வேலணையில் 4 வளர்ப்பு மாடுகள் திருடப்பட்டு இறைச்சியாக்கப் பட்டுள்ளன.

குறித்த வளர்ப்பு மாடுகள் 6 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதி கொண்டவை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக இப்பகுதியில் தொடர்ச்சியாக மாடுகள் திருடப்பட்டு இறைச்சியாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8)

## பஞ்ச ஈஸ்வரங்களுக்கான தரிசன யாத்திரை

(யாழ்ப்பாணம்)

இலங்கை முதல் உதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபை மகா சிவராத்திரியை முன்னிட்டு சிவலிங்கம் தாங்கிய ஊர்தி சகிதம் பஞ்ச ஈஸ்வரங்களுக்கான தரிசன யாத்திரை இன்று புதன்கிழமை காலை கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகவுள்ளது.

திருக்கோணேஸ்வரம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர், முன்



னேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆகிய ஆலயங்களுக்கு சென்று பூஜை வழிபாடுகளில் கலந்து கொள்ளவுள்ளனர். (8)

## யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்க பிரச்சினைக்கு சாதகமான தீர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் முன்வைத்த நிர்வாக முறைகேடுகள் மற்றும் ஊழியர் நலன் தொடர்பான கோரிக்கைகள் குறித்து நேற்று முன்தினம் நடைபெற்ற உயர் மட்ட கலந்துரையாடலில் சாதகமான தீர்வு எட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

துணைவேந்தர் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் அனைத்து பீடாதிபதிகள், மூன்று பேரவை உறுப்பினர்கள், பதிவாளர், நிதியாளர் உள்ளிட்ட முக்கிய நிர்வாக அதிகாரிகள் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் போது நிரந்தர மற்றும் உள்ளக பணியிட வெற்றிடங்கள் நிரப்புதல், தற்காலிக நியமனங்களில் வெளிப்படைத்தன்மை, மேலதிக நேரக் கொடுப்பனவு, இடர்கடன், வருடாந்த படி உயர்வு, ஊழியர் நலன், சுகாதாரம், பாதுகாப்பு, அடிப்படை வசதிகள் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

மேலும் கடமையின் போது உயிரிழந்த ஊழியருக்கான இழப்பீட்டு கொடுப்பனவுகள் தொடர்பான தாமதம் மற்றும் கிளிநொச்சி வளாக ஊழியர்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என நிர்வாகம் உறுதியளித்துள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நல்லிணக்கம், பரஸ்பர புரிதல் மற்றும் நடைமுறை தீர்வுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததாக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் தொழிற் சங்க நடவடிக்கைகள் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன் பல்கலைக் கழகத்தின் கல்வி மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள் இடையூறு இன்றி தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 400 | 400 | 400 | 350 | 300 |
| உருளைக்கிழங்கு | 160 | 150 | 150 | 150 | 320 | 370 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 300 | 300 | 350 | 300 |
| தக்காளி | 150 | 200 | 200 | 200 | 200 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 150 | 180 | 100 |
| கோவா | 200 | 200 | 200 | 300 | 250 | 200 |
| கரட் | 350 | 420 | 400 | 400 | 400 | 340 |
| பூசணி | 100 | 100 | 100 | 150 | 100 | 70 |
| புடோல் | 150 | 150 | 150 | 250 | 200 | 220 |
| வாழைக்காய் | 200 | 200 | 150 | 200 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 300 | 250 | 260 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 200 | 200 | 150 | 160 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 600 | 500 | 400 |
| வெண்டக்காய் | 400 | 350 | 200 | 400 | 200 | 250 |
| கருணைக் கிழங்கு | 300 | 160 | 200 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 500 | 800 | 400 | 600 | 500 | 300 |
| லீக்ஸ் | 350 | 400 | 400 | 400 | 400 | 340 |
| பீற்றூட் | 200 | 150 | 200 | 250 | 250 | 220 |
| கறிமிளகாய் | 800 | 600 | 600 | 800 | 600 | 600 |
| முருங்கைக்காய் | -- | 3200 | 4000 | -- | -- | -- |
| போஞ்சி | 200 | 220 | 300 | 400 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 300 | 300 | -- | -- |
| கீரை - 1 பிடி | 100 | 100-160 | 150 | 150 | -- | 80 |
| தேசிக்காய் | 150 | 150 | 200 | 200 | 150 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 160 | 150 | 100-160 | -- | 110 |
| இராசவள்ளி | 500 | 500 | 400 | 400 | -- | 375 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 200 | 250 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 200 | 150 | 90 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 60 | 50 | 100 | 100 | -- | 70 |
| [illegible] | 150 | 150 | 100 | 120 | -- | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நமோ நாராயண

# 31 ஆம் நாள் நினைவு தினமும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்




கடந்த 12.01.2026 திங்கட்கிழமை அன்று இறையடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவி

## அமரர்.தர்மராசா மல்லிகாதேவி

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 08.02.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது.வீட்டுக்கிருத்திய கிரியைகள் 11.02.2026 இன்று புதன்கிழமை பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பித்துக் கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.


(2039)

வாமஸ் வீதி, 3 ஆம் ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

தகவல்– குடும்பத்தினர்
077 100 2496

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் — 26 - 03 - 1943



மண்ணின் மடியில் — 09 - 02 - 2026

## பொன்னம்பலம் நவநீதகிருஷ்ணன்

(ஓய்வு பெற்ற நிர்வாக அலுவலர், மாவட்ட வைத்தியசாலை, வவுனியா)

காரைநகர் பண்டித்தாழ்வை பிறப்பிடமாகவும், புதுறோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நவநீதகிருஷ்ணன் 09.02.2026 திங்கட்கிழமை அன்று இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு ஐயம்பிள்ளை நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், உமாதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற வேலாயுத பிள்ளையின் அன்புச் சகோதரனும், அழகீசன்(பொறியியலாளர்-லண்டன்) அவர்களின் பாசமிகு தந்தையாரும், சாலினியின் அன்பு மாமனாரும், சாத்விகா,சஜானன், மித்திரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற வெற்றிநாதன் (பொறியியலாளர்) மற்றும் இந்திராதேவி,பொன்மலர், விமலாதேவி, ஜெயமணிதேவி, சந்திராதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12.02.2026 நாளை வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (C-4971)

புதுறோட், காரைநகர். தகவல் - குடும்பத்தினர்.

# மணிவிழா வாழ்த்து

திருமதி.

## கோகிலா சிவராசா

SLTS-I

சேவைக் காலம்

- யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை
  01.09.1992 – 02.01.1994
- யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை
  03.01.1994 – 18.02.2010
- யா/நவாலி சென் பீற்றேர்ஸ் றோ.க.த.க பாடசாலை
  19.02.2010– 01.01.2019
- யா/நவாலி மேற்கு அ.மி.த.க பாடசாலை
  02.01.2019–07.01.2020
- யா/வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை
  08.01.2020 – 11.02.2026




அகிலம் போற்றும் பணியாம் ஆசிரியப் பணி
ஆசிரியப் பணியில் நீவிர் ஓர் அச்சாணி
பள்ளி பணிதனை பக்குவமாய் முடித்திடுவீர்
பற்றுடனே பாடசாலையில் பணிவிடைகள் செய்திடுவீர்

பிரதி அதிபராய் பொறுப்பேற்று நீர்
ஒரு தாயுள்ளத்தோடு எம்மை வழி நடத்தினீர்
நிர்வாகச் சக்கரத்தை நேர்த்தியாய் சுழற்றினீர்
நிமிர்ந்து நின்று நிர்வாகத்தை நடத்தினீர்

ஆசிரியப் பெருமக்களின் ஆலமரமாய் பரந்து
விரிந்து ஓங்கி நிற்கும் எங்கள் கோகிலா ஆசிரியரே
ஓய்வு காலத்தில் நீவிர் மகிழ்வுடன்
வாழ வாழ்த்துகிறோம் வாழி!!!

(C-4975)

வாழ்த்துவோர்–
பாடசாலைச் சமூகம்,
யா/வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை

# 03 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு | தோற்றம் |
|---|---|---|
| 02.02.1958 | 11.02.2023 | 11.04.1962 |

அமரர்.நாகலிங்கம் செல்வதயாளரூபன்

அமரர்.செல்வதயாளரூபன் நாகராணி

ஆலமரங்களிரண்டு
அடியோடு சாய்ந்து
ஆண்டுகள் மூன்றாகி விட்டது
ஆண்டாண்டு காலம்
அழுது புரண்டாலும்
மாண்டோர் வருவதில்லை
எம் மனதை விட்டு
நீங்குவதுமில்லை
எம் மனதில் நிலைத்திருப்பீர்கள்
அன்பின் அடையாளமாக

[illegible] ஆம் குறுக்கு தெரு
யாழ்ப்பாணம்

(2036)

குடும்பத்தினர்
077 967 2409, 075 967 2409

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## சீனாவில் நிறுவப்பட்டது உலகின் முதல் கடல் காற்றாலை





(பீஜிங்)
20 மெகாவாட் திறன் கொண்ட உலகின் முதல் கடல் காற்றாலை விசையாழியை சீனா இயக்கத் தொடங்கியுள்ளது.

புஜியான் மாகாணத்தின் கடற்கரையிலிருந்து 30 கிலோமீற்றர் தொலைவில் கட்டப்பட்ட காற்றாலை விசையாழி, நாட்டின் மின்சார கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

இது ஆண்டுதோறும் 80 மில்லியன் கிலோவாட் மணிநேர மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடலில் 40 மீற்றர் ஆழத்தில் கட்டப்பட்ட இந்த விசையாழியின் கத்தி நீளம் 14 மீற்றர் ஆகும். கட்டமைப்பின் மொத்த உயரம் 174 மீற்றர். இது 58 மாடி கட்டடத்திற்கு சமமானது.

அத்துடன் இது சுமார் 44 ஆயிரம் வீடுகளின் வருடாந்திர மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

# 'ஈரான் அணுசக்தி

# ட்ரம்ப் - நெதன்யா



(வோஷிங்டன்)
அமெரிக்
டொனால்ட் ட்ரம்
இஸ்ரேல் பிரத
நெதன்யாகு இ
னுக்குச் செல்கிற

ஈரானுடனான அணு சக்தி பேச்சுவார்த்தைகளை விரிவுப்படுத்துமாறு ஜனாதிபதி ட்ரம்ப்பை வலியுறுத்தும் நோக்கில் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு இன்று புதன்கிழமை அமெரிக்காவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் யுரேனியம் வளங்களை நிறுத்த வேண்டும், அதன் பாலிஸ்டிக் ஏவுகணைத் திட்டங்களைத் திரும்பப் பெற வேண்டும் மற்றும் கிளர்ச்சிப்படைகளுடனான உறவுகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என இஸ்ரேல் நீண்டகாலமாகத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

ஆனால், இதனை நிரா

கரி
சக்
கெ
ஒப்
டுத்
கா
ளுக
தெ

## ஈரானில் நோபல் பரிசு பெற்றவருக்கு மேலும் 7 ஆண்டுகள் சிறை



(டெஹ்ரான்)
ஈரானில் மனித உரிமைகளுக்காகப் போராடி அமைதிக்கான நோபல் பரிசு வென்ற நர்கீஸ் முகமதிக்கு , மேலும் ஏழு ஆண்டுகளுக்கு மேல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஈரானில் நிலவும் ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்து வரும் நர்கீஸ் முகமதிக்கு, மேலும் ஏழரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நர்கீஸ் முகமதியின் சட்டத்தரணி முஸ்தபா நீலி தெரிவித்துள்ள தகவலின்படி, மஷாத் நகரில் உள்ள நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளதாக றொய்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது

"கூட்டுச் சதி" குற்றத்திற்காக ஆறு ஆண்டுகள் சிறையும், அரசுக்கு எதிரான "பிரசாரம்" செய்ததற்காக ஒன்றரை ஆண்டுகள் சிறையும் அவருக்கு விதிக்கப்பட்டுள்ளது.

இவற்றுடன் இரண்டு ஆண்டுகள் பயணத் தடை மற்றும் தலைநகர் டெஹ்ரானில் இருந்து சுமார் 740 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கோஸ்ப் நகருக்கு இரண்டு ஆண்டுகள் நாடு கடத்தப்பட்டு வசிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

53 வயதான நர்கீஸ் முகமதி, கடந்த பெப்ரவரி 2 ஆம் திகதி முதல் சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக அவரது ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2024 டிசம்பரில் மருத்துவ காரணங்களுக்காக அவர் விடுப்பில் வெளிவந்திருந்த நிலையில், மனித உரிமை சட்டத்தரணி ஒருவரின் நினைவுச் சடங்கில் நீதிக்காகக் குரல் எழுப்பியதால் மீண்டும் டிசம்பர் மாத இறுதியில் பொலிஸ்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

ஏற்கனவே 13 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த நர்கீஸ் முகமதி, சிறையில் இருந்தபோது பலமுறை மாரடைப்புக்கு உள்ளானவர்.

இத்தகைய உடல்நலக் குறைபாடுகளைக் கருத்திற் கொண்டு அவரைப் பிணையில் விடுவிக்க வேண்டும் என அவரது சட்டத்தரணி கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## லொறி கவிழ் 30 பேர் உ நைஜீரியாவில்



(நைஜர்)
நைஜீரியாவின் கானோ மாகாணத்தில் குவானர் பார்டே நகரில் உள்ள நெடுஞ்சாலையில் பயணிகள், சரக்குகளை ஏற்றிச் சென்ற ட்ரெய்லர் லொறியொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 30 பேர் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாக அந்நாட்டு

அ
றெ
டி
வி
யி
உ
எ
ரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## தி பேச்சுவார்த்தை'

## ாகு இன்று சந்திப்பு

ன்) ------------
ிக்க ஜனாதிபதி
ரம்ப்பைச் சந்திக்க
தமர் பெஞ்சமின்
இன்று வோஷிங்ட
கிறார்.



கரித்து வரும் ஈரான் அரசு அனு சக்தி திட்டத்தில் சில வரம்புகளைக் கொண்டு வருவதற்கு மட்டுமே ஒப்புக் கொண்டுள்ளது. இதைய டுத்து, ஈரானுக்கு எதிரான அமெரிக் காவின் பல அதிரடி நடவடிக்கைக ளுக்கு இஸ்ரேல் தொடர்ந்து ஆதரவு தெரிவித்து வருகின்றது.

இந்த நிலையில், ஈரான் அரசின் தலைவர்கள் சில முக்கிய விவகாரங்களில் அமெரிக்க அதிகாரிக ளுடன் பேச்சுவார்த்தை களை நடத்துவதற்கு ஒப் புக் கொண்டுள்ளனர்.

கடந்த டிசம்பர் முதல் அரசுக்கு எதிராக நடை பெற்ற மாபெரும் போராட் டங்களைத் தொடர்ந்து ஈரான் அதன் கட்டுப்பாடு களில் சில தளர்வுகளைக் கொண்டுவர முடிவு செய் துள்ளமை குறிப்பிடத்தக் கது. (3)

## அகதிகளை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்து விபத்து

## 53 பேர் மாயம்



(திரிபோலி)

லிபியக் கடற்கரையில் மக்களை ஏற்றிச் சென்ற ரப்பர் படகு கவிழ்ந்ததில், இர ண்டு குழந்தைகள் உட்பட குறைந்தது 53 பேர் காணா மல் போயுள்ளனர்.

கடந்த வெள்ளிக் கிழமை வடமேற்கு லிபியா வின் சுவாரா நகருக்கு வடக்கே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

படகில் மொத்தம் 55 பேர் இருந்துள்ளனர். இவர்கள் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. ஜாவியா பகுதியிலிருந்து புறப்பட்ட இப்படகு, சுமார் ஆறு மணி நேரப் பயணத்திற்குப் பிறகு கடலில் கவிழ்ந்துள்ளது.

விபத்தில் இரண்டு பேர் உயிர்தப்பியுள்ளனர். அவர்களுக்கு சர்வதேச புலம்பெயர்வு அமைப்பு அவசர மருத்துவ உதவி களை வழங்கியுள்ளது.


சர்வதேச புலம்பெயர்வு அமைப்பின் தரவுகளின் படி, இந்தப்பாதை உலகின் மிகவும் ஆபத்தான ஒன் றாகத் தொடர்கிறது.

இப்பாதையில் 2025 ஆம் ஆண்டு முழுவதும் 1,300இற்கும் அதிகமா னோர் காணாமல் போயுள் ளனர்.

2026 ஜனவரி மட்டும் குறைந்தது 375 பேர் உயி ரிழந்துள்ளனர்.

நூற்றுக்கணக்கான இறப்புகள் இன்னும் பதிவு செய்யப்படாமல் இருக் கலாம்," எனச் சர்வதேச புலம்பெயர்வு அமைப்பு கவலை வெளியிட்டுள் ளது. (3)

## ழ்ந்து விபத்து
## உயிரிழப்பு
## வில் சோகம்



அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நெடுஞ்சாலையில் சென்றுகொண் டிருந்த லொறி திடீரென கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாகவும் லொறி யில் பயணித்த 30 பேர் உயிரிழந்ததோடு இந்தப் பலி எண்ணிக்கை மேலும் அதிக ரிக்கலாம் என்றும் பலர் காய மடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்கு சென்ற மீட்புப் பணியாளர்கள் காயம டைந்தவர்களை வைத்திய சாலையில் அனுமதித்துள் ளனர்.

அவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக உள்ளதென வைத்தியர் கள் தகவல் தெரிவித்துள் ளனர்.

வாகனம் வேகமாக சென்றுகொண்டிருந்த போது சாரதியின் கட்டுப் பாட்டை இழந்து இக் கொடூர விபத்து நேர்ந் திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆபிரிக்காவின் அதிக மக்கள் தொகையை கொண்ட நைஜீரியா நாட் டில் வீதி விபத்துக்கள் அடிக்கடி இடம்பெறுவதற் கும் விபத்துக்கள் அதிகரிப் பதற்கும் வீதிகள் சீரற்று காணப்படுகின்றமை, போக்குவரத்துச் சட்டங் களை முறையாக அமுல் படுத்தாமை என்பனவே காரணம் என்றும் குறிப் பிடப்படுகிறது. (3)

## இஸ்ரேலிய ஜனாதிபதி விஜயத்தால் அவுஸ்திரேலியாவில் வெடித்த வன்முறை

(கன்பெரா)

இஸ்ரேலிய ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக்கின் அவுஸ்திரேலிய வரு கையை எதிர்க்கும் ஆர்ப் பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே சிட்னியில் மோதல்கள் வெடித்துள்ளன.

இதனையடுத்து நேற்று அவுஸ்திரேலியத் தலை வர்கள் அமைதியை வலியுறுத்தி போராட்டக் காரர்களை அமைதியாக இருக்குமாறு அழைப்பு விடுத்தனர்.


நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை சிட்னியின் டவுன் ஹால் அருகே கூடியிருந்த ஆயி ரக்கணக்கான போராட் டக்காரர்களை அகற்ற பொலிஸார் சென்றபோது வன்முறை வெடித்தது.

இதையடுத்து அதிகா ரிகளைத் தாக்கியதாகக் கூறப்படும் 10 பேர் உட்பட 27 பேர் கைது செய்யப் பட்டதாக சிட்னி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் அந்தோணி அல்பானீஸ் வன்முறை யால் "பேரழிவிற்கு ஆளா னதாக" கூறினார்.

மேலும் போராட்டக் காரர்கள் தங்கள் கருத் துக்களை அமைதியாக வெளிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி னார்.

கடந்த டிசம்பரில் பாண்டி கடற்கரையில் நடந்த யூத மத நிகழ்வில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 15 பேர் கொல்லப்பட்டதைத் தொட ர்ந்து, ஹெர்சாக் அவுஸ்தி ரேலியாவுக்கு வருகை தரு வதை எதிர்த்து நேற்று முன்தினம் மத்திய சிட்னி யில் ஆயிரக்கணக்கா னோர் கூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெப்ரவரி மாத இராசி பலன்கள்

## பண வரத்து திருப்தி தரும்!



**கிரகநிலை** - இராசியில் புதன், சனி, இராகு - பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் குரு(வ) - களத்திர ஸ்தானத்தில் கேது - விரைய ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** மனதில் உறுதி கொண்ட கும்ப இராசி அன்பர்களே! இந்த மாதம் மனதை உறுத்திக் கொண்டிருந்த கவலை நீங்கும். எவ்வளவு திறமையுடன் செயற் பட்டாலும் காரிய தடங்கல் ஏற்படும். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது கவனம் தேவை. பய ணத்தினால் வீண் செலவும், அலைச்சலும் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும்.

பண வரத்து திருப்தி தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான பணிகளில் முழுமூச்சுடன் செயற்பட்டு முன் னேற்றம் காண்பார்கள். குடும் பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். கணவன், மனைவிக்கு இடையே இருந்த மனவருத்தம் நீங்கும்.

குழந்தைகளின் எதிர்காலத் திற்கான திட்டங்களை செயற் படுத்துவீர்கள். பெண்கள் மற்ற வர்களின் பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதைத் தவிர்ப்பது நல்லது. அரசியல்வாதிகளுக்கு தொண் டர்களால் ஆதாயம் ஏற்படும். கலைத்துறையினருக்கு பண வரத்து இருக்கும். வராமல் இழுபறியாக இருந்த பணம் வந்து சேரும். மாண வர்களுக்கு முயற்சிகள் பலிதமா கும்.

**அவிட்டம் 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் மனதில் தெளிவு உண்டாகும். எந்த காரியத்தையும் செய்து முடிக்கும் திறமை அதிகரிக்கும். வயிற்றுக் கோளாறு உண்டாகலாம். பண வரத்துக் கூடும். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். ஆன்மீக நாட்டம், தெய்வ பக்தி அதிகரிக்கும். திருமணப் பேச்சுவார்த்தை வெற்றி யளிக்கும். பெண்களுக்கு பெற் றோரின் ஒத்துழைப்பு உண்டு. மூத்த சகோதரர்களிடம் விட்டு கொடுத்தல் நன்மையைத் தரும்.

**சதயம்:** இந்த மாதம் தொழில்




வியாபாரத்தில் இலாபம் கூடும். ஏற்றுமதி சிறக்கும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். பழைய பாக்கி வசூலாகும்.

உத்தியோகத்தில் இருப்பவர்க ளுக்கு மேன்மை உண்டாகும். மேல் அதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும். மாணவர்கள், ஆசிரியர் களிடம் பாராட்டைப் பெறுவார்கள். தனித் திறமை மேம்படும். சக மாணவர்களின் பொறாமைக்கு ஆளாக நேரிடும். பொழுது போக்கிற்கு இடம்கொடுக்க வேண் டாம்.

**பூரட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள்:** இந்த மாதம் குடும்பத்தில் இருப்பவர்கள் உங் களுடன் அனுசரித்துச் செல்வார்கள். விசேட நிகழ்ச்சிகளில் குடும்பத்தி னருடன் கலந்துகொள்ள நேரிடும். கணவன் மனைவிக்கு இடையே இருந்த மனவருத்தம் நீங்கும்.

பிள்ளைகளின் உடல் நிலையில் கவனம் தேவை. அலுவலகத்தில் மாற்றம் ஏற்பட வாய்ப்புகள் அதி கம். தெய்வீக சிந்தனையுடன் செயற்பட வெற்றி நிச்சயம். அத் தியாவசியச் செலவுகள் அதிகரிக் கும்.


**பரிகாரம்:** வியாழக்கிழமை யில் ஆஞ்சநேயரை வெண்ணெய் சாற்றி வணங்கி தீபம் ஏற்றி வர எல்லா கஷ்டங்களும் நீங்கும். பொருளாதாரம் மேம்படும் தைரி யம் உண்டாகும்.

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, வியாழன்

**சந்திராஷ்டம தினங்கள்:** 05, 06, 07

**அதிஷ்ட தினங்கள்:** 13, 14

## தொழில் வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும்!



**கிரகநிலை** - சுக ஸ்தானத்தில் குரு(வ) - ரண ருண ரோக ஸ்தானத்தில் கேது - இலாப ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் - அயன சயன போக ஸ்தானத்தில் புதன், சனி, இராகு என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** நட்புக்கு முக்கியத்துவம் அளிக்கும் மீன இராசி அன்பர்களே! இந்த மாதம் நீண்ட நாட்களாக இருந்து வந்த உடல் உபாதை மறையும். இராசி நாதனின் சஞ்சாரம் எல்லாவற்றி லும் இருந்து வந்த மனக் கவலையை நீக்கும். வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. தாயின் உடல் நிலையில் கவனம் அவசியம். எந்த ஒரு வேலையை செய்வதாய் இருந் தாலும் தகுந்த முன்னேற்பாடுகள் தேவை.

தொழில் வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பண வரத்து இருக்கும். பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உழைப்புக்கு ஏற்ற பலன் தாமதமாகக் கிடைக்கும். குடும் பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். உறவினர்கள் வருகை இருக்கும். கணவன் மனைவிக்கு இடையே ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

பிள்ளைகளின் முன்னேற்றத்தில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். பெண்களுக்கு திடீர் செலவு உண்டாகலாம். காரியங்களில் தடை தாமதம் ஏற்படலாம் கவனம் தேவை. அரசியல்வாதிகளுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். எதிர்க்கட்சியினர் உதவு வார்கள். கலைத்துறையினரின் படைப்புகளுக்கு மதிப்பு, மரியாதை கூடும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். மாணவர்களுக்கு கல்வியில் இதுவரை இருந்து வந்த தடைகள் அகலும்.

**பூரட்டாதி 4ஆம் பாதம்:** இந்த மாதம் திறமையாக செயற்பட்டு காரிய வெற்றி காண்பீர்கள். மதிப்பும், மரியாதையும் கூடும். மாணவர்கள் கல்வியில் சிரமப்பட்டு முன்னேற்றம் காண வேண்டி இருக்கும். மனோ தைரியம் கூடும். பெண்களுக்கு திருமணப் பேச்சு வார்த்தை கைகூடும். அரசால் அனுகூலம் உண்டு. எதிர்த்தவர்கள் அடங்குவர். தந்தையுடன் விவாதம் வரும். கவனம் தேவை. தகப்பனார் வழியில் இருந்து வந்த பிரச்சி னைகள் அகலும்.




**உத்திரட்டாதி:** இந்த மாதம் மனோ தைரியம் கூடும். எதிர்ப்புகள் விலகும். எந்தச் சூழ்நிலையையும் அனுசரித்துச் செல்வீர்கள்.

வீண் குழப்பம், காரிய தடை ஏற்பட்டு நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கூடுதல் கவனம் தேவை. பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். தடுமாற்றம் உண்டாகலாம். பண வரத்து தாம தப்படும். சொத்துகள் சம்பந்தமாக பிரச்சினைகள் எதுவும் இருந்தால் உங்களுக்கு சாதகமாக மாறும்.

**ரேவதி:** இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் சீரான நிலை காணப்படும். எதிர்பார்த்தபடி ஓடர் கள் கிடைப்பது தாமதமாகலாம். அரசாங்கம் தொடர்பான காரி யங்களில் மெத்தன போக்கு காணப் படும். உத்தியோகத்தில் இருப்ப வர்களுக்கு விருப்பமற்ற இட மாற்றம் உண்டாகலாம். இரவு நேரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சொந்த பந்தங்களின் வீட்டு விசேடங்களை முன்னின்று நடத்து வீர்கள்.

**பரிகாரம்:** சித்தர்களை வணங்க எல்லாப் பிரச்சினைகளும் தீரும். வாழ்க்கையில் முன்னேற் றம் உண்டாகும்.

**அதிஷ்ட கிழமைகள்:** புதன், வியாழன், வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 08, 09

**அதிஷ்ட தினங்கள்:** 15, 16, 17

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளிமாசடைதல் அதிகரித்ததால் சுவாசப் பிரச்சினைகள் எழலாம். கவனம்!



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

இலங்கையிலேயே யாழ்ப்பாண குடாநாடு வளிமாசடைதலால் என்றுமில்லாதவாறு அதிகம் பாதிக்கப்பட்ட பிரதேசமாக இனங்காணப்பட்டுள்ளது. அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் தந்திருக்கின்றது. இதுவரையிலும் உள்ள பிரச்சினைகளுக்கு மேலாக நாம் சுவாசிக்கும் காற்றும் கலப்படமாகிவிட்டதை நினைந்து எம்மை நாமே நொந்துகொள்ள வேண்டியிருக்கின்றது.

இது ஒரு சாதாரண சுற்றுச்சூழல் விடயம் மட்டுமல்ல, விஞ்ஞான சான்றாதாரங்களின் அடிப்படையில், நிறுவன கட்டமைப்பில் ஏற்பட்ட தவறாக, கண்ணால் கண்டறிய முடியாத நிலைமையில் எமது உயிரைக் குடிக்குமளவிற்கு பூதா காரமாகியிருக்கின்றது. குறிப்பாக பொதுமக்களின் சுகாதாரத்தில் பேரிடரை உருவாக்குமளவிற்கு உருவாகியிருக்கின்றதென்பது ஆச்சரியமல்லவா.

வளியினுடைய தரம் விரைவாக குறைவடைந்து பாதிப்பினை ஏற்படுத்தும் நிலைமைக்குள் இழுத்து வந்திருக்கின்றது. குறிப்பாக வடமாகாணத்தில் அதுவும் யாழ்ப்பாணத்தை உள்ளடக்கிய தூடன் புத்தளம், அநுராதபுரம், மன்னார், மட்டக்களப்பு மற்றும் கல்முனை ஆகிய இடங்களில் வளி சுத்தமில்லாமல் வந்திருக்கின்றது.

அதாவது மாசடைந்து விட்டது என்பதனை சாதாரண விடயமாக கணித்துவிடக்கூடாது. இந்த இடங்களில் வளியின் தரச் சுட்டி (Air Quality Index) உலக சுகாதார நிறுவனத்தின் பாதுகாப்பான அளவான 150 இனைத் தாண்டிவிட்டுள்ளது.

இது முக்கியமான சுற்றுச்சூழல் ஆபத்து ஆகும். இப்பிரதேசங்களில் வதியும் மக்களின் கோரிக்கைகளை செவிமடுத்துள்ள நீதித்துறை இதுசார்ந்த திணைக்களங்களுக்கு வளிமாசடைந்தது பற்றி என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு விளக்கம் கோரியிருக்கின்றது.

வளிமாசுபடுதல் அளவை கணிப்பீட்டில் சரியான அளவீடுகளாக இல்லாது விட்டாலும் அதிலிருந்து நாம் சுவாசிக்கும் காற்று மாசாகியிருக்கின்றதனை நாம் இலகுவில் ஊகித்துக் கொள்ளலாம். இதனால் சுவாசம் சம்பந்தமான பிரச்சினைகள் உருவாவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக இருக்கும்.

இதனால் யாழ்ப்பாணத்து வாசிகளின் வாழ்க்கை, சுகாதாரம் மற்றும் வாழ்வாதாரம் என்பன பாதிக்கபடுவதற்கு வாய்ப்புண்டு. இந்த மாசுக்களில் $PM_{2.5}$ என் னும் மிகச்சிறிய துணிக்கைகள் மனிதனுடைய உடலுக்கு தீங்கு விளைவிக்ககூடியதாகும். வளி மாசுற்றதில் உள்ள மாசுத்துணிக்கைகள் எமது சுவாசச் சுற்றோட்டத்தினுள் உட்புகுந்து சுவாசப்பையினை பாதிப்படையச் செய்யும் வல்லமை உள்ளதுடன் அதிலிருந்து குருதிச்சுற்றோட்டத்தினுள்ளும் உட்புக வாய்ப்புள்ளதாக அறியக் கிடைக்கின்றது.

இவ்வாறு நிகழ்ந்தால் இருதய நோய்கள் ஏற்படுவ தற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவும் பாரிசவாதம் மற்றும் நீண்டகால சுவாசஞ் சார்ந்த பாதிப்புக்களை ஏற்படுத்தவும் கூடும்.

யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆபத்தினளவு உலக சுகாதார சுட்டியிலிருந்து அதிகமாக இருப்பது தற்போது தெரியவந்துள்ள நிலையில் இதிலிருந்து மக்களைக் காப்பாற்றும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் $PM_{2.5}$ துணிக்கையின் வெளிப்பாட்டால் அதிக இறப்புக்கள் நிகழ்ந்தமை தெரியவந்துள்ளது.

குறிப்பிட்ட தினங்களில் வளி மாசடைதல் 151 என்னும் சுட்டியையும் தாண்டியதாக காணப்பட்டிருப்பதும் அதன் மூலம் சுகாதாரத்திற்கு கேடான நிலைமை நாம் சுவாசிக்கும் காற்றில் இருப்பதனை சுட்டிக்காட்டி இந்நிலைமை சிறுவர்களில் மற்றும் வயதானவர்களில் ஆஸ்த்துமா நோயை அதிகரிக்கச் செய்யும் என கண்டறியப்பட்டுள்ளது. சாதாரணமாகவே சுவாசிப்பதில் சிரமப்படும் ஆஸ்த்துமா நோயாளிகளுக்கு இது ஒரு பாரதூரமான செய்தியாகும்.

பிறப்பிலேயே ஆஸ்த்துமா நோயினால் அவதிப்படுவோர் இவ்வாறான செய்திகளை அறிந்தவுடன் இதுபற்றி எமது மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டுமென்னும் அவாவில் இதனை இங்கே பதிவிடுகின்றேன். கடந்த சிலநாட்களாக ஆஸ்த்துமா நோயின் தன்மை அதிகரித்து இருந்ததை உணர்ந்தவன் என்ற நிலையிலும் வழக்கமாக பயன்படுத்தும் inhaler இற்கு கட்டுப்படாதிருந்தமையையும் உணர்ந்திருக்கின்றேன்.

இத்தனை விடயங்களையும் தேடி எம்மினிய உறவுகளுக்கு ஆஸ்த்துமாவுடனேயே எழுத வேண்டியும் வந்திருக்கின்றது.

ஆஸ்த்துமா அளவுக்கதிகமாக இருப்பவர்கள் வெளியே திரிவதனை தவிர்ப்பதும் தங்களது மனைகளிலேயே இருப்பதும் அவர்களை பரிகரிக்க இயலுமாக இருக்கும் என்பதனையும் அறியத்தந்திருக்கின்றார்கள்.

இதனுடன் இரவுநேர அதிகரித்த குளிர் இன்னும் இவ்வாறான நோயாளிகளை பதம்பார்த்துவிடும் என்பதனை அவசியம் கவனத்திற் கொள்ள வேண்டும். பலருக்கு முதன்முறையாக ஆஸ்த்துமா நோய் வந்திருக்கின்றது. சுவாசிக்க சிரமப்படுவதும் மூக்கினால் நீர் வடிவதும் தலையிடி மற்றும் தலைப் பாரம் என்பன ஏற்படுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

வழமைக்கு மாறாக அதிகரித்த இரவுக் குளிர் பலருக்கு இன்னும் இந்த பிரச்சினையை வெளிக் கிளப்பியிருக்கின்றது. இவ்வாறு சுவாசிப்பதில் சிரமப்படுபவர்கள் இரவில் சுடு தண்ணீர் அருந்துவது அவசியம் எனவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. எதுவும் கட்டுப்பாட்டுக்குள் வராதிருப்பின் அவசியம் தகுந்த மருத்துவர்களை நாடுவது அவசியம் என்பதனை கருத்திற்கொள்க.

எமது வீட்டு வைத்தியம் ஓரளவிற்கு தான் எமக்கான நோய்தவிர்ப்பைத் தரும். சுவாசிப்பதில் இடர்ப்பட்டால் மருத்துவர்களை நாடி அவர்களின் ஆலோசனைகளை அவசியம் பெறுதல் வேண்டும். கவனயீனம் பாரதுாரமான விளை வுகளை ஏற்படுத்திவிடும்.

யாழ்ப்பாணத்தில் தற்சமயம் ஏற்பட்டுள்ள இப்பிரச்சனை எமது சூழலை முறையாக முகாமைத்துவப்படுத்தாமையையும் எமது காலநிலை மாற்றத்தை நாம் கவனயீனமாக எடுத்துக் கொண்டதும் காரணங்களாக முன்வைக்கப்பட்டுள்ளது.


முறையாக கழிவு முகாமைத்துவத்தை யாழ்மாநகர சபை பிரதேசங்களில் மேற்கொள்ளப் படாமையும் கழிவுகள் குறிப்பாக அசேதன இரசாயன கழிவுகள் முறையற்ற விதத்தில் அகற்றப்படுவதனையும் காரணமாக குறிப்பிட்டிருக்கின்றனர்.

மாநகரசபையினரின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளால் அவ்வப் போது கழிவுகள் அகற்றப்படுவதனை இங்கே அவசியம் குறிப்பிட்டுக் கூறினாலும் இப்பிரதேசத்தில் வாழும் மக்களும் இது விடயத்தில் ஒத்துழைக்க வேண்டும் என்பதனையும் எடுத்துரைக்க வேண்டியிருக்கின்றது.

நீர் வழிந் தோடுவதற்கு கட்டப்பட்ட அனைத்து வாய்க்கால்களிலும் மக்கள் குப்பைகளை கொட்டுவதனை காணலாம். தாமாக அதனை அகற்றாமல் மாநகர சபையை எதிர்பார்ப்பது எவ்வகையில் நியா யம் எனவும் வினவுகின்றனர்.

எது நடந்தாலும் எமது சுவாசத்திற்கு பிரச்சினை வந்திருக்கின்றது. இங்குள்ள மக்கள் சுவாச நோயாளிகளாக மாறுவதற்கு முன்னர் அனைவராலும் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர்

975





இதைத் தாங்கள் எண்ணிப் பார்த்தால் என் பேரில் குற்றம் சாட்டமாட்டீர்கள்.

"ஆமாம் புலியின் வாயிலிருந்து ஒரு பெண்ணைக் காப்பாற்ற வேண்டுமென்றால்கூடக் கரிகாலன் கட்டளை உமக்கு வேண்டும். தண்ணீரில் மூழ்கும் பெண்ணைக் கரை சேர்ப்பதற்கும் அவருடைய அனுமதி வேண்டும். நான் கவனித்துக் கொண்டுதானிருந்தேன்.

அடடா! மணி மேகலையைக் காப்பாற்றுவதில் இளவரசர் எத்தனை பரபரப்புக் காட்டினார்? நான் நீரில் மூழ்கி செத்துப்போயிருந்தால் சந்தோஷப்பட்டிருப்பார். அவருடைய மனதை அறியாமல் நீர் என்னைக் கரைசேர்த்து விட்டீர்"

"அம்மணி! அவ்வாறு சொல்ல வேண்டாம்! தாங்கள் ஓலை அனுப்பியபடியால்தான் கரிகாலர் காஞ்சியிலிருந்து இவ்வளவு தூரம் வந்திருக்கிறார்"

"ஆனால் அவர் இங்கு வராமல் தடை செய்வதற்காக நீர் அவசர அவசரமாக ஓடி வந்தீர். இளைய பிராட்டியின் செய்தியுடன் வந்தீர். ஆனால் உம்முடைய முயற்சி பலிக்கவில்லை.

என்னுடைய காரியத்தில் நீர் தலையிடுவதற்குச் செய்யும் முயற்சியெல்லாம் இவ்வாறுதான் தோற்றுப் போகும்!"

நந்தினியின் இந்த வார்த்தைகள் வந்தியத்தேவனின் மனக் குழப்பத்தை அதிகமாக்கின. அந்த வார்த்தைகளின் உட்கருத்தை நந்தினியின் முகபாவத்திலிருந்து தெரிந்து கொள்ளும் நோக்கத்துடன் அவளை உற்றுப் பார்த்தான். ஆனால் நந்தினியின் முகம் எவ்வித மாறுதலும் இன்றி வழக்கம் போலப் புன்னகைபூத்து விளங்கியது.

நந்தினி தொடர்ந்து, "உம்முடைய குற்றத்தை உம்முடைய முகத்தோற்றமே ஒப்புக் கொள்கிறது. அமாவாசை இராத்திரி, பள்ளிப்படைக்கு அருகில் நீர் என் வசம் அகப்பட்டீர். என் ஆட்களிடம் ஒரு சமிக்ஞை செய்திருந்தால் போதும்.

உம்மைக் கொன்றிருப்பார்கள். அப்போதும் உம் உயிரைக் காப்பாற்றி அனுப்பினேன். அதற்குக் கூட உமக்கு நன்றி இல்லை. உம் மைப் போல் நன்றி கெட்ட மனிதரை இந்த உலகத்தில் நான் பார்த்ததே இல்லை."


"தேவி! என் மனத்தில் தங்களிடம் பரிபூரண நன்றி குடிகொண்டிருக்கிறது. சத்தியமாகச் சொல்கிறேன்."

"ஆனால் இந்த ஊருக்கு நாம் வந்து இத்தனை நாளாகியும் உமது நன்றியைத் தெரிவிப்பதற்கு நீர் ஒரு முயற்சியும் செய்யவில்லையே? உமது வார்த்தையை நான் எப்படி நம்புவது?"

"தங்களைத் தனியாகச் சந்திக்கும்போது தெரிவித்துக் கொள்ளலாம் என்றிருந்தேன் அதற்குரிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை"

"சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொள்ள நீர் ஒருவித முயற்சியும் செய்யவில்லை. முகத்தோற்றத்தினால், கண் பார்வையினால் ஒரு குறிப்பு வெளியிடக் கூடவில்லை. ஏன்? இத்தனை நாளாக என் பக்கம் நீர் ஒரு தடவை யாவது திரும்பிப் பார்க்கக் கூடவில்லை.."

"தேவி! தாங்கள் சோழ நாட்டுத் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையாரின் தர்ம பத்தினி" "அதாவது கிழவனைக் கலியாணம் செய்து கொண்டவள் என்று என்னைப் பரிகசிக்கிறீர் இல்லையா?" (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## எதையும் ஏற்கும் அன்பு



வழக்கம் போல் நபிகள் நாயகம் தம் தோழர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தார்.

அப்பொழுது அங்கு வந்த மூதாட்டி ஒருத்தி சிறிய கூடை ஒன்றை அவரிடம் கொடுத்தாள். "என் தோட்டத்தில் விளைந்த திராட்சைப் பழங்களைத் தங்களுக்காகக் கொண்டு வந்தேன்" என்றாள்.

அதிலிருந்து ஒரு பழத்தை எடுத்து வாயில் போட்டார் நபிகள் நாயகம். பிறகு அந்த மூதாட்டியிடம் சிரித்துப் பேசிக் கொண்டே ஒவ்வொரு பழமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

இதைக் கவனித்த தோழர்கள், உண்ணும் பொருள் அன்பளிப்பாக வந்தாலும் நமக்கு எல்லாம் பகிர்ந்தளித்த பின்னரே நபிகள் உண்ணுவார். ஆனால் இன்று மட்டும் திராட்சைப் பழங்களைத் தாமே உண்கின்றார்.

நமக்கு ஒன்றுகூடக் கொடுக்கவில்லை. என்ன காரணமாக இருக்கும்?" என்று தங்களுக்குள் மெல்லப் பேசிக் கொண்டார்கள்.

திராட்சைக் கூடையும் காலியாயிற்று. மூதாட்டியும் நிறைவுடன் நபிகளிடம் இருந்து விடை பெற்றார்.

நபிகளின் தோழர்களில் ஒருவர் ஆர்வத்தை அடக்க முடியாமல், "பெருமானே! இன்று வழக்கத்திற்கு மாறாக எல்லாப் பழங்களையும் தாங்களே உண்டீர்கள். எங்களுக்கு ஒன்று கூடக் கொடுக்கவில்லையே. அதற்கு என்ன காரணம்?" என்று கேட்டார்.

அதற்கு நபிகள், "அந்த மூதாட்டி அன்புடன் திராட்சைப் பழங்களைக் கொண்டு வந்தாள். அதில் ஒன்றை எடுத்து வாயில் போட்டேன். கடுமையான புளிப்பு. உங்களிடம் பழத்தைத் தந்திருந்தால் உங்கள் முகம் எப்படியும் பழத்தின் புளிப்பைக் காட்டி இருக்கும்.

அந்த மூதாட்டியின் உள்ளம் வருந்தி இருக்கும் அதனால்தான் சிரித்துக் கொண்டே எல்லாப் பழங்களையும் நானே உண்டு விட்டேன்" என்று விளக்கம் தந்தார். நபிகள் நாயகத்தின் பெருந்தன்மையை எண்ணி மகிழ்ந்தார்கள் தோழர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பண்புகள் மனித குலத்தின் உயரிய சொத்தாகும், அதுவே நம் வாழ்வை ஜொலிக்கச் செய்கிறது. – அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## நோயுற்று இருந்தவேளை வந்துற்ற கன்மவினையோ

நோயுற்ற ஒருவரைப் பாதுகாப்பதில் மருத்து வரும் சக உத்தியோகத்தர்களும் எத்துணை முக்கியமானவர்களோ அதைவிட இன்னும் ஒருபடி முதன்மைக்குரியவர் நோயாளியுடன் இருந்து அவரைப் பராமரிக்கின்றவர்.

முன்பெல்லாம் தந்தை, தாய், பாட்டன், பாட்டி நோயுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தால், அவர்களை அருகிலிருந்து பிள்ளைகளும் மருமக்களும் பேரர்களும் பராமரிப்பார்கள்.

ஆனால் இன்று அந்த நிலைமை மலை யேறிவிட்டது. இப்போது நோயாளர் நலன்புரிச் சங்கத்துக்குச் சென்று என் தந்தையார் வைத் தியசாலை விடுதியில் அனுதிக்கப்பட்டுள்ளார்.

பகலும் இரவும் அவரைப் பராமரிப்பதற்கு ஆள்தேவை என்று கூறிவிட்டால் போதும், நோயாளர் நலன்புரிச் சங்கம் தங்கள் அமைப்பில் பதிவு செய்துள்ள ஒருவரை பரா மரிப்புக்காக அனுப்பும்.

அவருக்கு மூவாயிரம் ரூபாய் வழங்கப் படுவதுடன் மூன்று நேர சாப்பாட்டுக்கு ரூபாய் ஆயிரமுமாக நான்காயிரம் ரூபாய் வழங்கப்படு கிறது.

என்ன செய்வது. பெற்று வளர்த்த தாய், தந்தையை வைத்தியசாலையில் வைத்துப் பராமரிப்பதற்குப் பிள்ளைகளுக்கு நேரமில்லை என்ற நொண்டிச்சாட்டில் பராமரிப்பாளர்களை ஏற்பாடு செய்ய அந்தோ! கொடுமை.

ஒரு பராமரிப்பாளர் ஒரே நேரத்தில் மூன்று நான்கு பேரைப் பராமரிக்கின்ற பொறுப்பை எடுத்துக் கொள்கின்றார்.

பரவாயில்லை என்றால், பராமரிப்பும் இல்லை இரவு என்றதும் அந்தப் பராமரிப் பாளர் எங்கோ ஒரு மூலையில் கடும் நித்திரை.

என்ன செய்வது நோயுற்று அவஸ்தைப் படுகின்ற நோயாளி தம்பி... தம்பி... என்று அழைத்தாலும் அழைத்தவர் குரலுக்கு ஐயா! வருகிறேன் என்று சொல்ல ஒருவர் இல்லை.

ஆம், பெற்று வளர்த்த பிள்ளைகள் தம் வீட்டில் உறங்க, சம்பளம் பெறும் பராமரிப்பாளர் விடுதியின் ஒரு மூலையில் துயில் கொள்ள, பராமரிப்பு ஏதுமற்ற நோயாளி தவித்த வாய்க்குத் தண்ணீரும் இன்றி தங்கள் கன்ம வினைப் பயனை நோகின்றனர்.

ஆம், ஒருவர் இருவர் அல்ல. நான்கு நோயா ளர்களை ஒரு பராமரிப்பாளர் பொறுப்பெடுக் கும் கொடுமை நோயுற்ற காலத்தில் வந்துற்ற கர்மா என்று எண்ணுவதைத் தவிர வேறு என்னதான் செய்ய முடியும்.

ஓ! பராமரிப்பாளர் உறங்கும் அந்த வேளை யில் நோயாளி இவ்வுலகு விட்டேகினார். அன்னவருக்கு இறுதி மரியாதை தடல்புடல். சீனவெடிக்கும் பஞ்சமில்லை.

அவர் பெயரால் நோயாளர் நலன்புரிச் சங்க மும் பராமரிப்பாளரும் பல்லாண்டு வாழ்க.

ஆம், நோயாளர்களைப் பராமரிக்காதவர் கள் அங்கம் பெறுகின்ற அமைப்புக்கு நோயா ளர் நலன்புரி என்று பெயராம்.

யாரொடுநோவது. இறந்த ஆத்மாக்களின் சாபத்தை இவர்கள் கங்கையிலா! காசியிலா! கரைப்பார்கள்.

# வடக்கு, கிழக்கு அபிவிருத்தியில் ஜனாதிபதி அநுர விசேட கவனம்

## தனியான நிதி ஒதுக்கீடு – ஆளுநர் நா.வேதநாயகன்

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் விசேட பணிப்புரைக்கு அமைவாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் துரித அபிவிருத்திக்கெனத் தனியான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவுள்ளது. இதனைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், மாகாணத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய மிகப் பெரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான (Mega Projects) முன்மொழிவுகளை உடனடியாகத் தயாரிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில், மாகாண உயர் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற விசேட கலந்துரையாடலிலேயே ஆளுநர் இந்த அறிவுறுத்தலை வழங்கினார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியில் தனிக்கவனம் செலுத்தியுள்ளார். இதன் அடிப்படையில் இரு மாகாணங்களிலும் விசேட அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக நிதியை ஒதுக்கீடு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த அரிய வாய்ப்பை எமது மாகாணத்தின் வளர்ச்சிக்காக நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

வடக்கு மாகாண சபையால் ஏற்கெனவே 32 மிகப்பெரிய அளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுத் தயார் நிலையில் உள்ளன. இத்திட்டங்களைத் தற்போதைய சூழல் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப மீள் பரிசீலனை செய்து; உடனடியாகச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதிய திட்டங்களை வடிவமைக்கும் போதும், இருக்கும் திட்டங்களை மீளாய்வு செய்யும் போதும் சில விடயங்களில் அதிக கவனம் செலுத்துமாறு ஆளுநர் அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டினார்.

திட்டங்கள் மாகாணத்தின் பொருளாதாரத்தை உயர்த்தக் கூடியதாக இருக்க வேண்டும். எமது மாகாண இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்களாக அவை அமைய வேண்டும். மாகாணத்தில் இதுவரை பயன்படுத்தப்படாமல் இருக்கும் இயற்கை மற்றும் ஏனைய வளங்களைப் பயனுள்ள வகையில் கையாளக் கூடியதாக இருக்க வேண்டும். மாவட்ட ரீதியாக மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்ய வேண்டும்.

வெறுமனே கட்டடங்களைக் கட்டுவதை விட, மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நீண்டகாலத் திட்டங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனவும் ஆளுநர் இதன்போது வலியுறுத்தினார். (ம-7)

# பாடசாலைகளில் நிதி சேகரிக்க சட்டபூர்வ அனுமதி இல்லை

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் பாடசாலைகளில் நிதி சேகரிப்பதற்கு எந்தவித சட்டபூர்வமான அனுமதியும் வழங்கப்படவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் நேற்று கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைகளில் பல்வேறு செயற்பாடுகளுக்காக மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் நிதி சேகரிக்கப்படும் நடைமுறை நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது. ஆனால், தற்போதைய நிலையில் இவ்வாறான நிதி சேகரிப்புகளுக்கு அனுமதி இல்லை.

நிதி வழங்கக் கோரி சில குழுக்கள் அல்லது தனிநபர்கள் மேற்கொள்ளும் அழுத்தங்களால் மாணவர்கள் அசௌகரியத்திற்கு உள்ளானால், மாணவர்களின் நலன் கருதி அதில் தலையிடும் அதிகாரம் கல்வி அமைச்சுக்கு உண்டு.

பாடசாலைகளுக்கு ஆதரவளிக்க விரும்பும் பெற்றோர் அல்லது பழைய மாணவர் குழுக்கள் தன்னிச்சையாக வழங்கும் பங்களிப்புகளைத் தடுக்க முடியாது.

இருப்பினும் இதுவரை இது தொடர்பாக அமைச்சுக்கு முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை என அமைச்சர் குறிப்பிட்டார். (ம-7)

# குமாரபுரம் படுகொலையின் 30 ஆம் ஆண்டு நினைவுதினம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் குமாரபுரம் கிராமத்தில் இடம்பெற்ற மனிதப் படுகொலையின் 30ஆவது ஆண்டு நினைவுதினம் இன்று 11 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் குமாரபுரம் நினைவுத் தூபி வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

கடந்த 1996ஆம் ஆண்டு இதே நாளில் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட கொடூரப் படுகொலைகளில் 9 பெண்கள், 9 குழந்தைகள் உட்பட 24 தமிழர்கள் கொல்லப்பட்டனர். மற்றும் 26 பேர் படுகாயமடைந்தனர்.

20 ஆண்டுகளுக்குப் பிறகு ஜூலை 2016 இல் படுகொலை தொடர்பில் குற்றம் சாட்டப்பட்ட ஆறு இராணுவ வீரர்களும் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

### வட்டிப்பணக் கொடுப்பனவில் தகராறு

# அம்பாந்தோட்டையில் இளைஞன் கழுத்தறுத்துப் படுகொலை

அம்பாந்தோட்டை மாவட்டம், பெலியத்தை பகுதியில் இளைஞர் ஒருவர் கழுத்தறுத்துக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கட்டுவனைப் பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

வட்டிக்குப் பணம் கொடுப்பது தொடர்பாக ஏற்பட்ட நீண்டகால முரண்பாடு மற்றும் வாய்த்தர்க்கமே இந்தப் படுகொலைக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட மோதலின் போது, சந்தேக நபர்கள் மேற்படி இளைஞரின் கழுத்தை அறுத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். கொலையுடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்கள் தற்போது தலைமறைவாகியுள்ளனர்.

அவர்களைக் கைது செய்வதற்காகப் பொலிஸார் விசேட விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர். உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு 19

அல்லது கோபத்தில் இவர்களை வளைத்துப்பிடித்து, "நீங்கள் எவ்வளவு பெரிய ஆள், உங்களைப் புரிந்துகொள்ளாமல் இப்படி அசிங்கப்படுத்துகிறார்களே" என்று பக்குவமாகப் பேசினால், பட்சி படிந்துவிடும்.

இப்படித் தங்களுடன் இணைந்து பணியாற்றக்கூடியவர்களை சிஐஏ தொடர்ந்து தேடிக்கொண்டிருக்கிறது. இதற்காக, வெளிநாட்டு மக்கள் பங்கு பெறும் கூட்டங்கள், கலந்துரையாடல்கள், பார்ட்டிகளில் தவறாமல் கலந்துகொள்வார்கள். பல சமயங்களில், இவர்களே ஒரு விசாவுக்கு ஏற்பாடு செய்து ஆள் பிடிப்பதும் உண்டு.

மிக அபூர்வமாக, பிளாக்மெயில் உத்திகளையும் பயன்படுத்தியிருக்கிறது சிஐஏ. ஆனால், "நீ எங்களுக்குச் சாதகமாகச் செயற்படாவிட்டால், இதைச்செய்துவிடுவேன், அதைப் பிடுங்கிவிடுவேன்" என்று மிரட்டுவது. அவ்வளவாகப் பயன்படாது என்பது அங்கிருக்கும் பெரும்பாலான அதிகாரிகளின் கருத்து.

இப்படி ஒருவரை வருங்கால ஒற்றர் என்று தேர்ந்தெடுத்துக் கட்டம் கட்டியபிறகு, உடனே அவர் கையில் அப்பாயின்ட்மென்ட் ஆர்டரைக் கொடுத்துவிடமாட்டார்கள். பல வாரங்கள், அல்லது மாதங்கள் பொறுமையாகக் காத்திருப்பார்கள், கவனிப்பார்கள்.

யார் அவர்? என்ன வேலை செய்கிறார்? ஓய்வு நேரத்தில் என்ன பொழுதுபோக்கு? அவருடைய குடும்ப/தனிப்பட்ட பிரச்சினைகள் என்னென்ன? இப்போதைய அவசர, அவசியத் தேவைகள் என்னென்ன? அவரைக் கவர வேண்டுமானால், என்ன செய்யலாம்?


சம்பந்தப்பட்ட நபர் இசைப் பிரியரா? அவரைப் பின்தொடரும் சிஐஏ அதிகாரி, ச-ரி-க-ம-ப-த-நி என்று அரைகுறையாகவேனும் தாளம் போடக் கற்றுக்கொண்டாக வேண்டும். மீன் பிடிப்பதுதான் அவருடைய பொழுதுபோக்கு என்றால், வெறும் தூண்டிலோடு மணிக்கணக்காக அவர் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருக்க வேண்டும்.

இப்படி ஓர் இயல்பான பழக்கத்தை உருவாக்கிக்கொண்டபிறகுதான், அவரை நேரில் சந்தித்துப் பேசுவார்கள். "என்ன சார், எப்படி இருக்கீங்க? இந்த ஊர் பிடிச்சிருக்கா?" என்று சம்பிரதாயமாகத் தொடங்கி, அதன் பிறகு விடயத்துக்கு வருவார்கள்.

உங்களுக்குப் பணத்தேவையா? டொலர்களைக் கொட்டத் தயாராக இருக் கிறோம். இங்கேயே செட்டிலாக வேண்டுமா? குடியுரிமை காத்திருக்கிறது. உடம்பு சரியில்லையா? லேட்டஸ்ட் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்கிறோம். ஏதேனும் தப்புச் செய்து விட்டீர்களா? பிரச்சினையில்லை, சாட்சிகளைச் சுலபமாக அழித்து விடலாம்.

இப்படி யாருக்கு என்ன தேவை என்று அறிந்து தூண்டில் போடுவது ஒரேமாதிரியாக இருக்காது. ஒவ்வொருவருடைய தகுதி / அவர்கள் இப்போது இருக்கும் நிலைமை/ கொண்டு வரும் தகவல்களின் முக்கியத்துவம். ஆகியவற்றைப் பொறுத்துதான் சிஐஏ பர்ஸை அகலமாகவோ, குறுகலாகவோ திறக்கும்.

வெளிநாட்டு ஒற்றர்களைப் பரிசோதிப்பதற்கும் சிஐஏ ஒரு வழிமுறை வைத்திருக்கிறது. ஆரம்பத்தில், ஏற்கெனவே தங்களுக்குப் பதில் தெரிந்த கேள்விகளைமட்டும் கேட்பார்கள். சம்பந்தப்பட்ட நபர் அவற்றுக்கு எப்படி பதில் சொல்கிறார் என்பதைப் பொறுத்துதான், கடினமான பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.



சிஐஏ அதிகாரிகளுக்குக் கை வந்த கலை. ஏதேனும் ஒரு பலவீனம் இல்லாத மனிதர்கள் உண்டா? அதைக் கச்சிதமாகக் கண்டுபிடித்து மடக்கிவிடுவார்கள்.

சிஐஏயால் கட்டம் கட்டப்பட்டவர்களில் பலர், அவர்களோடு இணைந்து பணியாற்ற முன்வருவார்கள். மிகச்சிலர், "அதெல்லாம் முடியாது, நான் என் நாட்டுக்குத் துரோகம் செய்யமாட்டேன்" என்பார்கள். அல்லது வெளியே போய்யா" என்று கத்துவார்கள்.

அதற்கெல்லாம் அலட்டிக்கொண்டால், உளவுப் பிழைப்பு நடத்த முடியாது. "ரொம்ப நன்றி சார் என்று முகத்தைத் துடைத்துக்கொண்டு வெளியே வரவேண்டியதுதான்.

சிஐஏயுடன் இணைந்து பணியாற்ற முன்வரும் ஒற்றர்கள் ஒவ்வொருவருக்கும். மாதச் சம்பளம் உண்டு. இதுதவிர. அவர்கள் சிஐஏ அதிகாரிகளைச் சந்தித்துத் தகவல்களை வழங்கும்போதெல்லாம் கூடுதலாக போனஸ் வழங்குவார்கள். இந்தச் சம்பள, போனஸ் விவரங்கள்

இப்படி ஓர் ஒற்றர்மீது நம்பிக்கை வந்ததும், அவர்களுடன் பேசுவதற்காக ஒரு சிஐஏ அதிகாரியை நியமித்து விடுவார்கள். அதன்பிறகு. இந்த ஒற்றர்கள் திரட்டும் அனைத்துத் தகவல்களும், இந்த அதிகாரி வழியாகதான் மேலிடத்துக்குச் செல்லும்.

இதற்காக, ஒவ்வொரு நாட்டிலும் ரகசியமாகத் தனி வீடுகளை வாடகைக்கு எடுத்துவைத்திருந்தது சிஐஏ. இங்கேதான் ஒற்றர்களும் சிஐஏ அதிகாரிகளும் சந்தித்துப் பேசுவார்கள். இந்தச் சந்திப்புகள் ஒவ்வொன்றும், அவர்களுக்கே தெரியாமல் பதிவு செய்யப்படும்.

இதையெல்லாம் கதைபோல் சொல்வதற்குச் சுவாரஸ்யமாகதான் இருக்கிறது. ஆனால் இப்படி வெளிநாட்டில் உட்கார்ந்துகொண்டு அந்த ஊர் விவகாரங்களையெல்லாம் உளவு பார்த்துக்கொண்டிருப்பது சுலபமான காரியமில்லை. மாட்டிக்கொண்டால் தொலைத்துவிடுவார்கள். இதனால்தான், வெளிநாடுகளில் செயற்படும் தன்னுடைய அதிகாரிகள் ஒவ்வொருவருக்கும்.

என்.சொக்கன்

விதவிதமான "கோல்கேட்" பாதுகாப்பு வளையங்களுக்கு ஏற்பாடு செய்கிறது சிஐஏ.

பெரும்பாலும், இவர்கள் அமெரிக்கத் தூதரக அதிகாரிகளாக இருப்பார்கள். சிலருக்கு வேறொரு பெயர். வேறொரு உபத்திரவமில்லாத அடையாளம் கூடத் தரப்பட்டிருக்கும். இந்த முகமூடிகளுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டுதான் ரகசியக் காரியங்களில் ஈடுபடுவார்கள்.

அதுமட்டுமில்லை. ஒவ்வொரு முறை உள்ளூர் ஒற்றர்களைச் சந்திக்கச் செல்லும் போதும், இவர்கள் அதற்குப் பக்காவாக ஒரு மாற்றுக் கதை தயார் செய்தாகவேண்டும்.

ஒருவேளை மாட்டிக்கொண்டு விட்டால், "நான் சும்மா இந்தப்பக்கம் காற்று வாங்க வந்தேன்" என்று அசட்டுத்தனமாக உளறிக்கொட்டாமல், கொஞ்சமாவது நம்பும்படியாகப் பொய் சொல்ல வேண்டியிருக்கும்.

இத்தனை எச்சரிக்கைகளையும் மீறி, சில சமயங்களில் சிஐஏ அதிகாரிகள், அல்லது ஏஜென்ட்கள் உள்ளூர்க் காவல்துறை உளவுத்துறையினரிடம் சிக்கிக்கொண்டுவிடுவது உண்டு. அதுமாதிரியான சந்தர்ப்பங்களில், முள்ளில் விழுந்த சேலையை எடுப்பதுபோல் மிகக் கவனமாக நிலைமையைக் கையாள வேண்டியிருக்கும்.

தூதரக அதிகாரிகள் என்பது போன்ற போர்வையில் வந்திருக்கும் அமெரிக்கர்கள், பெரும்பாலும் இந்தச் சிக்கலில் இருந்து சுலபமாகத் தப்பித்து விடுவார்கள்.

சில சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு பதிலாக, அமெரிக்காவில் கைதாகியிருக்கும் ஒற்றர்களை விடுவித்துப் பண்டமாற்று செய்து கொள்வதும் உண்டு.

இந்த அதிகாரிகளோடு ஒப்பிடுகையில், "ஏஜென்ட்" கள் எனப்படும் உள்ளூர் ஒற்றர்களுக்குதான் ஆபத்து அதிகம். அவர்கள் ஏதேனும் ஒரு ரகசியத் தகவலைத் திரட்டிக் கொண்டிருக்கும்போது மாட்டிக்கொண்டு விட்டால், அமெரிக்காவும் காப்பாற்றாது. உள்நாட்டிலும் உதவி கிடைக்காது. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளையை...

பட்டுள்ளது.

அல்லைப்பிட்டிப் பகுதியில் நேற்று அதிகாலை பொலிஸாரின் கட்டளையை மீறி பயணித்த வாகனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுவன் ஒருவன் உயிரிழந்தான்.

சிறுவனது மரணம் தொடர்பான உடற்கூற்றுப் பரிசோதனை யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று சட்ட வைத்திய அதிகாரி எம்.மயூரதன் முன்னிலையில் நடைபெற்றது.

துப்பாக்கிச் சன்னம் சிறுவனின் நெற்றியில் பட்டு ஊடுருவி தலையில் மூளையைத் தாக்கியமையால் மரணம் சம்பவித்துள்ளது என உடற்கூற்று அறிக்கையில் அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,33)

## மனித உரிமை...

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டிப் பகுதியில் நேற்று அதிகாலை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின் கள நிலைவரங்களை ஆராய்வதற்காக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் சட்டத்தரணி கனகராஜ் தலைமையிலான மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் நேற்று சம்பவ இடத்திற்கு விஜயம் செய்து கள ஆய்வில் ஈடுபட்டனர். (ம-7)

## உயர்மட்ட...

நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 17 வயதுச் சிறுவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில், உயர்மட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை வீதியில், அல்லைப்பிட்டிச் சந்தியில் அமைந்துள்ள பொலிஸ் காவலரணில் கடமையில் இருந்த பொலிஸார், சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த ஹயஸ் ரக வாகனம் ஒன்றை நிறுத்துமாறு கட்டளையிட்டுள்ளனர்.

எனினும், அவ்வாகனம் பொலிஸாரின் கட்டளையை மீறிப் பயணித்ததால் துப்பாக்கிப் பிரயோகம் முன்னெடுக்கப்பட்டது.

வாகனத்தை நோக்கி நேரடியாகத் துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கு முன்னதாக, வானத்தை நோக்கிப் பலமுறை எச்சரிக்கை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுள்ளன. அந்த எச்சரிக்கையையும் மீறி வாகனம் பயணித்ததாலேயே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து ஊர்காவற்றுறை பொலிஸாரும் யாழ். மாவட்டக் குற்ற விசாரணைப் பிரிவினரும் இணைந்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்றார். (ம-7)

## வானிலிருந்து...

கிச்சூட்டில் 17 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

இந்நிலையில் குறித்த சிறுவன் பயணித்த வாகனத்தில் இருந்து வாள் ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவத்தின் போது மேலும் இரண்டு இளைஞர்கள் குறித்த வாகனத்தில் இருந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவர்களை 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-7,33)

## ஏற்றச் சென்ற...

சித்தி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் பொலிஸாரின் [illegible] சென்ற வாகனத்தின் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியபோது, வாகனத்தினை ஓட்டிச் சென்ற 17 வயதுச் சிறுவன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளான்.

இந்நிலையில் சிறுவனின் உயிரிழப்புத் தொடர்பில் சித்தியார் ஊடகங்களிடம் தெரிவிக்கையில்,

சிறுவனுக்கு சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாத போதிலும், அவர் வாகனம் ஓட்டுவதனை தொழிலாகச் செய்து வந்தார். பொலிஸாருக்கு கையூட்டுக்களை வழங்கி சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி சாரத்தியம் செய்து வந்தார்.

அருவி வெட்டு நடவடிக்கைக்காக வேலணையில் வேலையாட்களை ஏற்றுவதற்காகச் சென்றபோது தன்னிடம் பணம் இல்லாததால் தான் பொலிஸார் மறித்தபோது நிறுத்தாமல் பயணித்துள்ளார். அதனாலேயே பொலிஸார் சுட்டுள்ளனர்.

அவருடன் வாகனத்தில் பயணித்த ஏனைய இருவரும் நெருங்கிய உறவினர்களே. குடும்பக் கஷ்டம் காரணமாகவே 17 வயதில் அவர் உழைக்கச் சென்றவர். அவரை அநியாயமாகச் சுட்டுக் கொன்று விட்டார்கள் என கண்ணீர் மல்க தெரிவித்தார். (ம-7,33)

## பொம்...

னெடுத்த விசாரணையில் அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம் மருதனார்மடம் சந்தைக்கு நேற்றுச் செவ்வாய்க்கிழமை துப்பாக்கியுடன் பச்சை மிளகாய் வாங்க ஒருவர் வந்துள்ளார்.

குறித்த நபர் தலைக்கவசம் அணிந்து, கைகளுக்கு கையுறை அணிந்தவாறு, பை ஒன்றுடன் வந்து, அங்கிருந்த வியாபாரி ஒருவரிடம் பச்சை மிளகாயைக் கொள்வனவுசெய்து கொண்டு, "சந்தைக்குள் வட்டிக்குப் பணம் வழங்குபவர்கள் யார்?" என வினாவியுள்ளார். அதற்கு வியாபாரி தனக்குத் தெரியாது எனக் கூறியதும் அவர் அங்கிருந்து சென்றுள்ளார்.

குறித்த நபர் கையில் கொண்டு வந்திருந்த பையினுள் ரி56 ரக துப்பாக்கி காணப்பட்டதாகவும், அவரது இடுப்புப் பகுதியில் [illegible] துப்பாக்கி ஒன்று மறைத்து வைக்கப்பட்டிருந்தமை போன்ற தோற்றம் காணப்பட்டதாக, சுன்னாகம் பொலிஸாருக்கு வியாபாரிகள் அறிவித்துள்ளனர்.

அதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் சந்தையில் இருந்த கண்காணிப்பு கமரா பதிவுகளை சோதனையிட்டு, துப்பாக்கியுடன் வருகை தந்த நபர் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் குறித்த நபரை அடையாளம் கண்ட பொலிஸார், அவரைக் கைது செய்து செய்துள்ளதுடன், அவர் சந்தைக்கு கொண்டு சென்ற துப்பாக்கியையும் மீட்டுள்ளனர். அதன்போது குறித்த நபர் சந்தைக்கு கொண்டு சென்றது போலித் துப்பாக்கி எனவும், அவர் தெல்லிப்பழைப் பகுதியைச் சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33,104)


மஹஜன சம்பத
திகதி 2026.02.10
சீட்டிழுப்பு இலக்கம் 6101
P 4 9 0 6 2 9
அத சம்பத P 0 6 2 9
சீட்டிழுப்பு இலக்கம் 676
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.02.10
சீ.இழுப்பு இலக்கம் 217
மகரம் 25 41 51 3226

தன நிதானய
திகதி - 2026.02.10
சீட்டிழுப்பு இலக்கம் - 2131
L 05 27 50 54 L
Double Chance

மெகா பவர்
திகதி 10/02/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2449
Z 08 43 47 58 70

ஜய ஜய JAYA
திகதி 2026.02.10
சீட்டிழுப்பு இலக்கம் 0369
I 4 6 6 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4343
சீட்டிழுப்பு திகதி 10.02.2026
P 17 21 38 58
P
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.02.10
சீட்டிழுப்பு இலக்கம் 1410
மிதுனம் 09 35 46 58 மிதுனம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
10.02.2026 வெற்றி வாரம் 0809
ஆங்கில எழுத்து G மற்றும் வெற்றி இலக்கம் 1 7 7 7 2 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,961,222.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3075
சீட்டிழுப்பு திகதி 2026.02.10 தினம் செவ்வாய்க்கிழமை
03 04 13 67 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 97,200,974.40
DLB

சனிதா
திகதி 10.02.2026 வெற்றி வாரம் 5236
08 13 37 42 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,969,701.60
DLB

சசிரி
வெற்றி வாரம் 905
சீட்டிழுப்பு திகதி 10.02.2026 செவ்வாய்க்கிழமை
32 43 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,570,680.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4787
சீட்டிழுப்பு திகதி 10.02.2026 தினம் செவ்வாய்க்கிழமை
10 23 43 44 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 19 28 51 58 62
சீட்டிழுப்பு வாரம் 2251
10.02.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.627,651,845.80
DLB

அத கோட்டிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2901
சீட்டிழுப்பு திகதி : 2026.02.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.88,120,256.80
16 25 42 45 A
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் வசாவிளான் பாடசாலை

முன்பாக 1 ½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு

- பலாலி வீதி 50m தூரம்
- வசாவிளான் மத்திய கல்லூரி 150m தூரம்
- நிலப்பரப்பு, செம்மண்தரை, நன்னீர் ஊற்று
- 18 அடிப் பாதையுடன் விற்பனைக்குண்டு

(2040)

தொடர்பு: 074 029 2338
076 990 3039


## போலி ஆவணத்துடன் மணல் கடத்தல்

சாவகச்சேரி பொலிஸாரால் முறியடிப்பு

போலியாகத் தயாரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்திற்கு மணல் கடத்தலில் ஈடுபட்ட டிப்பர் வாகனத்தை நேற்று முன்தினம் திங்கட்கிழமை சாவகச்சேரிப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய போதைப்பொருள் மற்றும் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்ட விசேட வீதிச் சோதனையின் போதே குறித்த டிப்பர் கைப்பற்றப்பட்டதாகவும் இதன் போது சாரதி தப்பியோடியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,30)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4977)

076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

## மாப்பிள்ளை தேவை

01.அளவெட்டி. இந்து. 2000. கேட்டை. O/L, Cananda Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54407)

02.சண்டிலிப்பாய். இந்து. 1987. உத்திரட்டாதி. Business Managment, UK Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(57038)

03.மீசாலை. இந்து. 1993. சதயம். MBBS Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(56429)

04.குப்பிளான். இந்து. 1997. கேட்டை. Lawyer, Germany Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(55147)

05.சுதுமலை. இந்து. 1991. விசாகம். Bsc BSCN, Canada Citizzen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(55115)

06.மாதகல். இந்து. 1990. திருவோணம். BBA, Germany & Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54542)

07.கந்தர்மடம். இந்து. 1988. ரோகிணி. Bsc Biomedical, ACCA, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54136)

08.காரைநகர். இந்து. 1992. சித்திரை. Phd, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(54115)

09.காரைநகர். இந்து. 1990. ஆயிலியம். AAT, UK Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(55026)

10.மாவிட்டபுரம். இந்து. 1985. ரேவதி. A/L, Manager, Uk Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54067)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். Unmarried, Divorce என்பன உண்டு. (C-4979)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
074 387 3686

தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்திற்கு

## பணியாளர்கள் தேவை

தொல்புரத்தில் அமைந்துள்ள சிவபூமி முதியோர் இல்லத்திற்கு உதவி மேற்பார்வையாளர் மற்றும் காவலாளி தேவைப்படுகின்றனர்.

தங்குமிடம், உணவு இலவசம். (C-4973)

தொடர்பு: 021 222 7938

## PREGNANCY VOUCHER

கர்ப்பிணித் தாய்மாருக்கான Voucher இற்குரிய பொருட்கள் இப்போது Happy Super market உரும்பிராயில் கொள்வனவு செய்யலாம்.

(வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம் பதிவுள்ளோர் மட்டும்) (2042)

Happy Super Market - உரும்பிராய்
077 780 8030

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## உடனடி வேலைவாய்ப்பு

**உப விடுதிக் காப்பாளர் - பெண்**

எமது சங்கத்தின் பராமரிப்பில் இயங்கும் திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்திற்கு (பெண்கள்) உப விடுதிக் காப்பாளர் பணிக்காகத் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள் / அனுகூலங்கள்**

- வயதெல்லை 25 - 55
- கல்வித்தகைமை க.பொ.த சா/தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தியுடன் அல்லது அதற்கு மேற்பட்டது.
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்ற வேண்டியிருக்கும்.
- வாரத்தில் ஒரு நாள் விடுமுறை வழங்கப்படும்.
- துறைசார்ந்த கல்வி/ அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை
- கிராம சேவகர் நற்சான்றிதழ் அவசியம்

(C-4972)

சுய விபரக் கோவையினை 20.02.2026 இற்கு முன்பதாக தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கவும்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
செயலாளர்

021 222 6525, 076 300 4877

## மணமகன் தேவை

1999 கனடா, 1995 லண்டன், 1987 அவுஸ்திரேலிய போன்ற நாடுகளில் வசிக்கும் பெண்களுக்கு உள்ளூர், வெளியூர் மணமகன்கள் தேவை.

தரகர்கள் தொடர்புகொள்ள வேண்டாம். (6798)

தொடர்புகளுக்கு :
077 408 8241

## வேலையாட்கள் தேவை

வவுனியா மற்றும் முல்லைத்தீவில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் மற்றும் புடவைக் கடை ஒன்றிற்கு முன்னனுபவம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. (2041)

076 889 1308
077 606 1333


# மரண அறிவித்தல்

தோற்றம்
01 - 06 - 1932



மறைவு
09 - 02 - 2026

## வயித்திலிங்கம் சங்கரப்பிள்ளை (JP)

"சேவைச் செம்மல்"

முன்னாள் வருமானப் பரிசோதகர் (நெடுந்தீவு, நானாட்டான் பிரதேச சபை, யாழ். மாநகர சபை), முன்னாள் பிரதேச சபைத் தலைவர் - நெடுந்தீவு, முன்னாள் கிராம அபிவிருத்தி சங்கச் செயலாளர், நெடுந்தீவு மேற்கு, நல்லூர் தெற்கு, முன்னாள் சனசமூக நிலைய செயலாளர், நெடுந்தீவு மேற்கு, நல்லூர் தெற்கு

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது இல.72, செட்டித்தெரு, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட வயித்திலிங்கம் சங்கரப்பிள்ளை அவர்கள் கடந்த (09.02.2026) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
0779825051

(C-4978)

## கொக்குவில் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்)
### வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

### வருடாந்த பொதுக்கூட்டம்

காலம் : 15.03.2026 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : 10.00 மணி
இடம் : ஆனந்த மண்டபம் - பழைய மாணவர் சங்க மற்றும் நம்பிக்கை நிதியக் கட்டடம்
தலைவர் : திரு.வ.பிரபாகரன்

2026/ 2027 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபைத் தெரிவானது திருத்திய புதிய பழைய மாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்) யாப்பு விதிக்கு அமைவாக இடம்பெறும்.

பிரேரணைகள் ஏதும் இருப்பின் எதிர்வரும் 01.03.2026 ஆம் திகதிக்கு முன்னராக தபாலில் அல்லது நேரடியாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

தபால் முகவரி
செயலாளர், பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்

செ.சோபிதன்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம் (தாய்ச் சங்கம்)
கொக்குவில் இந்துக் கல்லூரி
077 501 8195

(6803)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.